Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 96

புதன்கிழமை
02 மார்ச் 2022

மாசி 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

**கொரோனா**
நேற்று 914
மொத்தம் 6,46,948

**உயிரிழப்பு**
நேற்று 22
மொத்தம் 16,244

# 7½ மணிநேரம் மின்சாரம் 'கட்'

கொழும்பு, மார்ச் 2
இன்று நாடளாவிய ரீதியில் 7 மணித்தியாலம் 30 நிமிடங்கள் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப் படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கை மின்சார சபை விடுத்திருந்த மின்வெட் டுக் கோரிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
15




# பாரதூரமான எரிபொருள் தட்டுப்பாடு!

கொழும்பு, மார்ச் 2
நாட்டின் பல பகுதிகளிலும் எரிபொருளுக்கு பாரதூரமான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் நீண்ட வரிசைகளில் எரிபொருளுக்காகக் காத்திருக்கின்றனர். வடக்கு மாகாணத்திலும் நெருக்கடி நிலைமை தீவிரமடைந்துள்ளது. அதிக கொள்வனவால் பொருள் செயற்கைத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது என்று அரசாங்கம் கூறுகின்ற நிலையில், விடயத்துக்குப் பொறுப்பான வலுச்சக்தி அமைச்சர் உதய கம்மன்பில, டொலர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரையில் எரிபொருள் நெருக்கடி தொடரும் என்று கூறியிருக்கிறார். 15



## 'ஏதாவது செய்யுங்கள்'

**மின்சாரத் துறை அமைச்சருக்கு ஜனாதிபதி அவசர பணிப்பு**

கொழும்பு, மார்ச் 2
மின் நிலையங்களுக்குத் தேவையான எரிபொருளை தடையின்றிப் பெறுவதற்கான நடவடிக்கைகளைத் துரிதமாக எடுக்கவேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மின்சாரத் துறை அமைச்சர் காமினி லொகுகேயிடம் அவசர பணிப்புரை விடுத்துள்ளார். 06



இறுக்கமான சுகாதார நடைமுறைகளுடன் திருக்கேதீச்சரத்தில் நேற்று சிவராத்திரி வழிபாடுகள் நடைபெற்றன. பெரும் திரளான பக்தர்கள் சிவராத்திரி வழிபாடுகளில் கலந்துகொண்டனர். (எ-213)

## சிவராத்திரி பூசைகளுக்கு வெடுக்குநாறியில் தடை!

வவுனியா, மார்ச் 2
வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இம்முறையும் சிவராத்திரி பூசைகளை நடத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று ஆலயத்தின் பூசகர் த.மதிமுகராசா தெரிவித்தார். 15

## ஐ.நாவின் 46/1 தீர்மானம் இலங்கைக்கு சரிவராது!

### நல்லிணக்கத்துக்கு பாதகம் என அரசாங்கம் புதிய விளக்கம்

ஜெனிவா, மார்ச் 2
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்ட 46/1 தீர்மானம் இலங்கை வாழ் மக்களுக்கு அர்த்தமற்றது என்பதை நாம் மீண்டும் நினைவுபடுத்துகின்றோம். 15

## வடக்கு பஸ் சேவைகளும் குறைக்கப்படும் அபாயம்!

யாழ்ப்பாணம், மார்ச் 2
எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக வடக்கு மாகாணத்தில் தனியார் போக்குவரத்துச் சேவைகள் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தேவையான எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதால் போக்குவரத்துச் சேவைகளை மட்டுப்படுத்த வேண்டி ஏற்படுமென தனியார் பஸ் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.
கிளிநொச்சி மாவட்ட 15



## உக்ரைன் மீது தொடர்கிறது ரஷ்யாவின் கடும் தாக்குதல்


லண்டன், மார்ச் 2
ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே பேச்சுக்கள் நடைபெற்றுள்ளபோதும், உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் ஆறாவது நாளாக நேற்றும் 15

## சுகாதாரத் தரப்பினர் மீண்டும் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 2
சம்பள முரண்பாடுகள் தொடர்பான தங்களின் கோரிக்கை தொடர்பில் அரசாங்கம் இதுவரை எந்தவொரு முன்னகர்வுகளையும் மேற்கொள்ளாத நிலையில் இன்று முதல் இரு நாள்களுக்கு மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப் படவுள்ளது என்று சுகாதார 15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்பு மிக்க கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்றது. வெளி வீதியில் மும்மூர்த்திகளும், மூன்று தேர்களில் வந்து அடியார்களுக்கு அருள் காட்சி கொடுத்தனர். (ஒ-4-125)

# பெண்களை இழிவுபடுத்தும் கருத்துக்களை வெளியிடாதீர்

## ஊடகங்களிடம் கோரிக்கை

**கொழும்பு, மார்ச் 2**

**பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஈடுபடும் அரசியல்வாதிகளின் கருத்துக்களை ஊடகங்கள் பிரசுரிக்கக் கூடாது என்று ஐக்கிய மகளிர் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ஊடகங்கள் நாகரிக மற்றும் நெறிமுறையான ஊடக மரபுக்காக, மனசாட்சிக்கு இணங்கிப் பணியாற்றுவது அவசியம்.

சில ஊடகங்கள் ஒளிபரப்பு நேரத்தையும், இரசனைகளையும் தவறாகப் பயன்படுத்துகின்றன. குறிப்பாக, சில அரசியல்வாதிகள் மக்களின் தனிப்பட்ட பிரத்தியேக வாழ்க்கையை அம்பலப்படுத்துகின்றனர்.

சில ஊடகங்கள், பெண்களை அவமரியாதை செய்யும் வகையில் அந்த அறிக்கைகளை வெளியிடுகின்றன.

பெண்கள் மற்றும் சிறுவர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் இழிவுபடுத்தல், அவமானப்படுத்துதல் மற்றும் ஆதாரமற்ற கோரிக்கைகள் தொடர்பாக அரசியல்வாதிகள் வெளியிடும் ஊடகங்கள் அனுமதிக்கக் கூடாது -என்றுள்ளது. (ஒ-4-இ)

# சிவராத்திரியை முன்னிட்டு ஆன்மீக சைக்கிள் பயணம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

சிவராத்திரியை முன்னிட்டு நேற்று இருவர் ஆன்மீக சைக்கிள் பயணத்தை மேற்கொண்டனர்.

ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் வை.கைலநாதன், மாவட்டக் கூட்டுறவு சபைப் பணியாளர் எஸ். ராஜகண்ணன் ஆகிய இருவருமே பயணத்தை மேற்கொண்டனர்.

சித்தன்கேணி சிவன்கோயில் முன்றிலிலிருந்து காலை 5.30 மணிக்கு மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தை நோக்கி சைக்கிள் பயணத்தை மேற்கொண்ட இருவரும் முற்பகல் 11 மணிக்கு திருக்கேதீஸ்வர ஆலயத்தைச் சென்றடைந்தனர். (ஒ-14)



# இறுக்கமான நடைமுறைகளுடன் திருக்கேதீச்சரத்தில் சிவராத்திரி

மன்னார், மார்ச் 2

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக, இறுக்கமான சுகாதார நடைமுறைகளுடன் மன்னார் திருக்கேதீச்சரத்தில் மஹா சிவராத்திரி நேற்று இடம்பெற்றது.

கொரோனாத் தடுப்பூசியின் 3 டோஸ்கள் செலுத்தியவர்கள் மட்டுமே, பாலாவியில் தீர்த்தம் எடுத்துவர அனுமதிக்கப்பட்டனர்.

இராணுவம், பொலிஸ் மற்றும் சுகாதாரத் துறையினர் இணைந்து பரிசோதனையில் ஈடுபட்டனர்.

மன்னார் பிரதேச செயலரின் ஒழுங்குபடுத்தலில், மன்னார் மாவட்டச் செயலர், மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் மேற்பார்வையிலும், வெளி நிர்வாக ஒழுங்குகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

பக்தர்களும் மிக அமைதியாக தீர்த்தம் எடுத்துவந்து மூல லிங்கத்துக்கு அபிஷேகம் செய்து, தங்களுடைய நேர்த்திக் கடன்களைச் செலுத்தினர்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, இந்தம்முறை வெளி மாவட்டங்களிலிருந்து பக்தர்களின் வருகை குறைவாகக் காணப்பட்டது. (ஒ-4-213)

# நகுலேஸ்வரர் தீர்த்தம் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 2

வரலாற்றுச் சிறப்பு மிக்க கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா கடந்த 16 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய நிலையில் இன்று தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

நேற்று வெளி வீதியில் மும்மூர்த்திகளும் மூன்று தேர்களில் வலம் வந்தனர்.

15 நாள்கள் கொண்ட ஆலய மஹோற்சவத்தில் இன்று புதன்கிழமை காலை 6 மணிக்கு புனித "கண்டகி" தீர்த்தத்தில் தீர்த்தோற்சவமும், மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும். (ஒ-4-125)

# கட்டுப்பாட்டுத் தளர்வால் மீண்டும் தொற்றுப் பரவல்

### பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

கொரோனாத் தடுப்பூசி மீதான நம்பிக்கையில் அதிகாரிகள் எடுக்கும் சில தீர்மானங்களால் நாட்டில் மீண்டும் கொரோனாப் பரவல் அதிகரித்துள்ளது என இலங்கைப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது. இதனால் தடுப்பூசிகளுக்கு கட்டுப்பாடாத புதிய வகை கொரோனாத் திரிபுகள் உருவாகும் அபாயம் உள்ளது என அதன் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார். தடுப்பூசிகளின் அடிப்படையில் சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளமை துரதிர்ஷ்டவசமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (வ-இ)



# ரஷ்ய, உக்ரைன் சுற்றுலாவிகளின் விசாக்காலம் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 2

இலங்கையில் தங்கியுள்ள ரஷ்ய மற்றும் உக்ரைன் பிரஜைகளின் சுற்றுலா நுழைவிசைவுக் காலத்தை இரண்டு மாதங்களுக்கு நீடிக்க அரசு தீர்மானித்துள்ளது.

இந்த முன்மொழிவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ரஷ்யா, உக்ரைன் இடையே நிலவும் போர் நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவால், அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தகவலின்படி, தற்போது 11 ஆயிரத்து 463 ரஷ்ய பிரஜைகளும், 3 ஆயிரத்து 993 உக்ரைன் பிரஜைகளும் சுற்றுலா நுழைவிசைவுடன் இலங்கையில் தங்கியுள்ளனர். (ஒ-4-இ)

# ஒரே நாடு, ஒரே சட்டம் செயலணி பதவிக்காலம் 3 மாதங்கள் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 2

'ஒரே நாடு, ஒரே சட்டம்' தொடர்பான ஜனாதிபதி செயலணியின் பதவிக்காலம் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயலணி கடந்த ஆண்டு ஜனாதிபதியால் நிறுவப்பட்டது. கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையிலான இந்தச் செயலணிக்கு, இலங்கைக்குள் 'ஒரே நாடு, ஒரே சட்டம்' மற்றும் சட்ட வரைவைத் தயாரித்து, நீதி அமைச்சால் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் திருத்தங்களை ஆய்வு செய்து




பொருத்தமான திருத்தங்கள் உள்ளதா எனத் தீர்மா[illegible] கருதப்படும் [illegible] பிக்கும் பணி வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், பொது மக்கள் மற்றும் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய நிபுணர்கள் குழுவின் கருத்துக்களைப் பெறுவதற்கு செயலணிக்குக் கூடுதல் கால அவகாசம் வழங்கும் வகையில், காலத்தை நீடித்து ஜனாதிபதி அதிவிசேட வர்த்த[illegible]தலை வெளியிட்டுள்ளார். (ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# அபகரித்த நிலங்களை மீட்பதற்கு விரைவில் தீவிரப் போராட்டங்கள்

*தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், மார்ச் 2

**அபகரிக்கப்பட்ட நிலங்களை மீட்க நாட்டிலும், புலம் பெயர் தேசங்களிலும் போராட்டத்தை முன்னெடுக்க இருக்கின்றோம் என்று தெரிவித்தார் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா.**



தமிழரசுக்கட்சியின் மாவட்ட அலுவலகத்தை வவுனியாவில் நேற்று முன்தினம் திறந்துவைத்த பின்னர் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நாங்கள் ஏற்கனவே எதிர்த்துக் குரல் எழுப்பியிருக்கின்றோம். அதற்கு எதிராக வாக்களித்து இருக்கின்றோம். அவ்வாறான சூழ்நிலைகள் இருந்தாலும் இப்பொழுது இயக்க ரீதியாக எமது எதிர்ப்பை வெளிப்படுத்திச் செயற்பட்டு வருகின்றோம்.

எங்களை நாங்கள் ஆள வேண்டுமாக இருந்தால் எங்கள் மண்ணிலே நில உரிமை அடிப்படையாக இருக்கவேண்டும். அது இருக்கிறதா? ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக பல முனைகளில் மகாவலி, தொல்பொருளியல் என்பவற்றின் போர்வையில் பௌத்த மயமாக்கல், சிங்கள மயமாக்கல் என்பன முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் நாங்கள் மதிப்பீடு செய்யப்போகின்றோம். எங்களுடைய சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்கு எங்கள் மண்ணை நாங்கள் ஆளுவதற்கு நிலம் எங்களுக்கு இருக்க வேண்டும்.

இழக்கும் நிலையில் உள்ள நிலங்களை பாதுகாக்கவும், பறிக்கப்பட்ட, அபகரிக்கப்பட்ட இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை நாங்கள் மீட்டெடுப்பதற்காகவும் விரைவில் தமிழரசுக் கட்சியின் மாநாடு நடத்தப்பட இருக்கின்றது. சரியான அடிப்படையில் நில ஆக்கிரமிப்புத் தொடர்பான புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு, அவற்றை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்துவதுடன், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நில அபகரிப்புக்கு எதிராக போராட்டங்களையும் முன்னெடுக்க வுள்ளோம் - என்றார்.

(ம-110)

## சிறுபோக விவசாயத்துக்கு பொட்டாசியம் இறக்குமதி

கொழும்பு,மார்ச் 2

இந்த வருடத்தில் சிறுபோக விவசாய நடவடிக்கைகளுக்காக மியூரேட் ஒஃப் பொட்டேஷ் எனப்படும் பொட்டாசியம் குளோரைட் உரம் இறக்குமதி செய்யப்படவுள்ளது.

இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய 38 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் உரத்தை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஒ-4,இ)

## மின்சாரத் தடைக்கு தீர்வுகாண முயற்சி

நாட்டில் ஏற்பட்டுள்ள மின்சாரத் தடைக்கு, விரைவில் தீர்வு பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.



அமைச்சரவைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

மின்சார சபைக்குத் தேவையான எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தனியார் பேருந்துகளுக்கு இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்களில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் இருந்து எரிபொருளை வழங்குவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. ரயில் திணைக்கள களஞ்சியசாலைகளிலும் எரிபொருளைச் சேமிப்பதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது - என்றார். (ஒ- 4,இ)

# விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு அழுத்தம் கொடுப்பதும் உரிமை மீறல்தான்

*பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் வலியுறுத்து*

யாழ்ப்பாணம்,மார்ச் 2

இந்த நாட்டில் அனைத்து மக்களுக்கும் உரிமைகளை சமமாக வழங்க வேண்டும். இதில் அரசுக்கு முக்கிய பங்குள்ளது என்று மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் வலியுறுத்தினார்.

'நீதிக்கான எங்களின் குரல்' எனும் தலைப்பிலான மனித உரிமை மற்றும் அடிப்படைச் சுதந்திரத்தை வலியுறுத்திய இறுதி நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமூக, பொருளாதார உரிமைகள் தொடர்பாக நேரடியான ஏற்பாடுகள் அரசிடம் இல்லை. எந்த வளங்களும் இல்லை. இருக்கின்ற வளங்களை வழங்கும்போது சமத்துவமாக வழங்கவேண்டும். யார், யாருக்கு எந்தச் சந்தர்ப்பத்தில்,என்ன தேவை என்பது அறிந்து வழங்க வேண்டும். மிகவும் பாதிக்கப்பட்டவர் யார் என்பதைத் தெரிவுசெய்து வாழ்வாதாரங்களை அவர்களுக்கு வழங்க வேண்டியது அரச அதிகாரிகளின் பொறுப்பு. குறிப்பாக வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டும். தெரிவு முறை தெளிவாக இருக்கவேண்டும். பிறழ்வாக இருக்கக் கூடாது. பயனாளிகளின் தெரிவு (சமுர்த்தி, வீட்டுத் திட்டம், வாழ்வாதாரம்) வெளிப்படையாக இருக்க வேண்டும். பட்டியல் காட்சிப்படுத்தப்பட வேண்டும். அதேபோன்று முன்னாள் போராளிகள் விடுதலை செய்யப்பட்டு திரும்பத்திரும்ப இன்று வரை அழுத்தம் கொடுப்பது மனித உரிமை மீறலாகும். மனித உரிமை அமைப்புக்கள் நிறைய இருக்கின்றன. சட்டத்தின் பிரகாரம் விசாரணைகளை மேற்கொள்ளக் கூடிய அதிகாரம் வழங்கக் கூடியது இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு மட்டும்தான். நாம் இப்படியான பிரச்சினைகளுக்குத்தான் முன்னுரிமை கொடுப்போம். தடுத்து வைத்தல், சித்திரவதை செய்தல், காணாமல் ஆக்கப்படுதல், சிறைச்சாலைக் கைதிகளின் பிரச்சினைகள் இவற்றுக்கு முன்னுரிமை. முறைப்பாடு செய்யப்பட்டால் மட்டுமே விசாரணைகள் நடைபெறும் - என்றார்.

(ஒ-4,159)

**ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது கண்டியளோ. அப்பிடித்தான் அறிக்கையளும், புள்ளிவிவரங்களும் நடைமுறை வாழ்க்கைக்குச் சரிவராது எண்டதத்தான் இப்ப இருக்கிற எரிபொருள் பிரச்சினை சொல்லுது. பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளும், அரசாங்க அதிகாரிகளும் 'வடக்கில எரிபொருள்களுக்கு எந்தத் தட்டுப்பாடும் இல்லை. தேவையான அளவு இருக்குது. அதைவிட காங்கேசன்துறையிலயும் ஸ்ரோர் பண்ணி வைச்சிருக்கிறம்' எண்டு கண்டபடி அறிக்கையெல்லாம் விட்டவை. ஆனால், வடக்கில இப்ப எல்லாப் பெற்றோல் செற்றுக்கு முன்னாலையும் டீசல், மண்ணெண்ணெய், பெற்றோல் எண்டு மூண்டுக்கும் மூண்டு வரிசையில சனம் நீட்டுக்கு நிக்குது. அதிலையும் கன இடங்களில டீசலும் மண்ணெண்ணெயும் துப்பரவா இல்லை.**

**நேற்றுப் பட்சி சொன்னமாதிரி கன இடத்தில டீசல் இல்லாததால அரிவி வெட்டு அப்பிடியே இடையில நிக்குது. அதைவிட மினிபஸ் ஓட்டம் அரைவாசியா குறைஞ்சு போட்டுது. மினி பஸ்ஸுகளுக்கும் சி.ரி.பி. டிப்போவில டீசல் அடிக்க ஒழுங்கு பண்ணுறம் எண்டு அரசாங்கம் அறிவிச்சிருக்கே தவிர அதுக்கான ஏற்பாடுகளொண்டும் சரியா நடக்கேலை. அதைவிட நேற்று சிவராத்திரிக்கு கோணேச்சரத்துக்கும் திருக்கேதீச்சரத்துக்கும் கன பேர் தூர இடங்களில இருந்து பஸ் பிடிச்சுப் போனவை. ஆனால், அப்பிடிப் போய் வரேக்க வழியிலை டீசல் அடிக்க முடியாமல் அந்தரப்பட்டு வேற பஸ்ஸுகளில மாறித்தான் பயணத்தை முடிச்சிருக்கினம். அப்பிடி எதையும் சனம் தாங்கள் நினைச்ச மாதிரி செய்யேலாத அளவுக்கு எல்லாப் பக்கமும் பிரச்சினையாக் கிடக்குது.**

**வழக்கமா பெற்றோல்தான் இல்லாமல் போறது. ஆனால் இந்தமுறை மட்டும் டீசலுக்குக் கடும் தட்டுப்பாடு. அதுக்குக் காரணம், தென்னிலங்கையில இருக்கிற மின்சாரத்தை உற்பத்தி செய்யிற நிலையங்களுக்கு டீசலை குடுத்திட்டு அதில மிச்சம் இருக்கிறதைத்தான் செற்றுகளுக்கு பங்கிட்டு அனுப்பி வைக்கினமாம். அதாலதான் இவ்வளவு தட்டுப்பாடு. ரணகளத்திலையும் ஒரு கிளுகிளுப்பு மாதிரி இந்த டீசல் தட்டுப்பாட்டுக்கையும் ஒரு நல்ல விசயம் என்னெண்டா, கள்ளமன் ஏத்திற டிப்பர்களெல்லாம் ஓடுறதுக்கு டீசல் இல்லாமல் அங்கங்க நிப்பாட்டி வைச்சிருக்காம்.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டுவாகல் கடற்படைக்கு

# காணி வழங்குவதற்கு 23 பேர் கடும் எதிர்ப்பு

முல்லைத்தீவு, மார்ச் 2

முல்லைத்தீவு மாவட்டத்தின் வட்டுவாகல் கடற்படைத் தளத்துக்கு காணி சுவீகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், 23 பேர் தமது காணிகளை வழங்க மறுப்புத் தெரிவித்துள்ளனர் என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வட்டுவாகல் கடற்படைத்தளத்துக்காக 671 ஏக்கர் காணியைக் கையகப்படுத்தக் கோரப்பட்டுள்ளது. இதில் 292 ஏக்கர் அரச காணிகளாக காணப்பட்டுள்ள போதும் ஏனைய 379 ஏக்கர் தனியார் நிலமாக காணப்படுகின்றது. இவ்வாறு 35 பேருக்கு சொந்தமான 379 ஏக்கர் காணியில் சிலர் காணி சுவீகரிப்புக்கு உடன்பட்டு மாற்றுக்காணி அல்லது இழப்பீட்டினை பெற்றுக்கொள்ள முன்வந்துள்ளார்கள். ஆனால் 23 பேர் தமது காணிகளை வழங்க மறுப்புத் தெரிவித்துள்ளனர் -என்றார். (ம-19)

## கைவிடப்பட்ட மூதாட்டி முதியோர் இல்லத்தில் சேர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 2

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்பாக அநாதரவாகக் கைவிடப்பட்ட கஜேந்தினி (வயது80) என்ற மூதாட்டி கடந்த மாதம் 25 ஆம் திகதி கைதடி அரச முதியோர் இல்லத்தில் பிரதேச செயலகத்தால் இணைக்கப்பட்டுள்ளார்.

மூதாட்டியின் உறவினர்கள் நல்லூர் பிரதேச செயலகத்துடன் அல்லது கைதடி முதியோர் இல்லத்துடன் தொடர்புகொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)



## அகவன் உற்பத்தி நிலையம் புதுக்குடியிருப்பில் திறப்பு

முல்லைத்தீவு, மார்ச் 2


போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு கிழக்கு பகுதியில் அகவன் எனும் பெயரில் உற்பத்தி நிலைமொன்று திறக்கப்பட்டுள்ளது. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் இதைத் திறந்துவைத்தார்.

இதற்கான நிதியை சுவிஸ்நாட்டில் வசிக்கும் யாழ். வடமராட்சியைச் சேர்ந்த யோ.வசந்தின் என்பவர் வழங்கினார். (வ-19)

## மருத்துவச் சான்றிதழ் பெறுவோருக்கான அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ்.போதனா மருத்துவமனைக்கு மருத்துவச் சான்றிதழ் பெற வரும் அனைவரும் மருத்துவச் சான்றிதழ் பெறுவதற்கான அனுமதிக் கடிதத்துடன் வருகை தந்து மருத்துவ பரிசோதனைகளுக்கான பொருத்தமான திகதியைப் பெற்றுக்கொண்டு அதற்கான திகதியில் வந்து பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு மருத்துவமனைப் பதில் பணிப்பாளர் மருத்துவர் கே.நந்தகுமாரன் அறிவித்துள்ளார். (ஒ-14)



## முதிரை மர குற்றிகளுடன் இருவர் கைது

மன்னார், மார்ச் 2

வாகனத்தில் சூட்சுமமான முறையில், பல லட்சம் ரூபா பெறுமதியான முதிரைக் மரக்குற்றிகளைக் கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலுப்பைக்கடவையில் நேற்று அதிகாலை விசேட அதிரடிப்படையினர் மற்றும் மடு வனவளப் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் இணைந்து முன்னெடுத்த நடவடிக்கைகளின் போது மரக்கடத்தல் முறியடிக்கப்பட்டது.

நெல் மூடைகளுக்கு கீழ், சுமார் 22 முதிரை மரக்குற்றிகள் இவ்வாறு கடத்தப்பட்டுள்ளன. மரக்குற்றிகள் மற்றும் வாகனம் ஆகியன அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ-4-56)

மைத்திரியின்

## அப்பக் கதையின் இரண்டாம் பாகம்!

சு.க.வின் நிலைப்பாடு குறித்து இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 2

சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன உட்பட சுதந்திர கட்சியின் உறுப்பினர்களின் கருத்துக்கள் குறித்து அவதானம் செலுத்துமாறு அரச தலைவர்களிடம் வலியுறுத்தவுள்ளோம். சுதந்திரக் கட்சியின் தலைவர் அப்பம் உண்ட கதையின் இரண்டாம் பாகத்தை அரங்கேற்றுவதற்கான வாய்ப்பு அதிகம் காணப்படுகிறது என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லாட்சி அரசாங்கத்தில் நாட்டு மக்கள் எந்தப் பிரச்சினைகளையும் எதிர்கொள்ளவில்லை மகிழ்வுடன் வாழ்ந்தார்கள் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளமை வேடிக்கையாகவுள்ளது. நல்லாட்சி அரசாங்கம் சிறந்ததாக செயற்பட்டிருந்தால் நாட்டு மக்கள் ஏன் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். நல்லாட்சி அரசாங்கத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கிடையில் அதிகாரப் போட்டித்தன்மை காணப்பட்டது. அரசியல் முரண்பாடு தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்தியது. 2019ஆம் ஆண்டு தேசிய பாதுகாப்பை கருத்திற்கொண்டு நாட்டு மக்கள் ஜனாதிபதி கோத்தாபய தலைமையில் பலமான அரசாங்கத்தை தோற்றுவித்தார்கள்.

நெருக்கடியான சூழ்நிலைமையிலும் தற்போது அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. வெளிநாட்டு கையிருப்பு வரையறுக்கப்பட்டுள்ளதால், எரிபொருள் கொள்வனவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் மின்விநியோகத்திற்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். நடைமுறையில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்த நிலையில் உள்ளது. குறுகிய அரசியல் நோக்கத்துக்காக சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன உட்பட சுதந்திர கட்சியினர் அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சிப்பதை அவதானிக்க முடிகிறது. சுதந்திரக் கட்சியின் தலைவர் அப்பம் உண்ட கதையின் இரண்டாம் பாகத்தை அரங்கேற்ற அதிக வாய்ப்புள்ளது - என்றார். (ம)

## மருத்துவ அதிகாரிகள் விவகாரத்தில் அமைச்சரவை தலையீடு வேண்டாம்

ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 2

அமைச்சரவை பத்திரங்களின் ஊடாக சம்பளத் திருத்தங்களை மேற்கொள்ளாமல், சம்பளக் கொள்கைக்கு அமைய செயற்பட வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர், ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடனான விசேட கலந்துரையாடலில் சங்கத்தினர் இந்தக் கோரிக்கையை விடுத்தனர். சுகாதாரத் துறை மற்றும் மருத்துவர்கள் தொடர்பான பிரச்சினைகள் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டன. ஒரு நாட்டின் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கு அரச சேவையில் முறையான சம்பளக் கட்டமைப்பைப் பேணவேண்டியதன் அவசியத்தையும், பொறுப்புக்கூறல் மற்றும் ஊழியர் கட்டமைப்புக்குள் சம்பளத்தை நிர்ணயிப்பது தொடர்பிலும் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது என்றும் சங்கத்தினர் தெரிவித்தனர். (ஒ-4-இ)

அமெரிக்க வெளிவிவகார செயலர்

## விக்டோரியா நுலாண்ட் இலங்கைக்குப் பயணம்

கொழும்பு, மார்ச் 2

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான வெளியுறவுத்துறை செயலர் விக்டோரியா நுலாண்ட் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். எதிர்வரும் 22ஆம் திகதி இவருடைய பயணம் இடம்பெறவுள்ளது.

விக்டோரியா நுலாண்ட் தனது பயணத்தின்போது ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட அரச தரப்பினரையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட எதிர்க்கட்சிகளையும் சந்தித்து கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப் படுகிறது.



நீண்ட நாள்களுக்குப் பின்னர் இவ்வாறானதொரு மூத்த இராஜதந்திர அதிகாரியை அமெரிக்கா இலங்கைக்கு அனுப்புகின்றது. ஜனாதிபதி ஜோ பைடனின் முக்கிய செய்தியுடனேயே விக்டோரியா நுலாண்ட் இலங்கைக்கு வருகின்றார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் தட்டுப்பாடு: நெல் அறுவடை பாதிப்பு

கிளிநொச்சி,மார்ச் 2

நாட்டில் எரிபொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். நெல் அறுவடை இயந்திரங்களுக்கு எரிபொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியாத காரணத்தால், நெல் அறுவடை பிந்தியுள்ளது. தற்போது சீரற்ற காலநிலை நிலவுவதால், கிடைக்கப்பெற்ற விளைச்சலையும் உரியகாலத்தில் பெறமுடியாது திண்டாடுகின்றனர்.



குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் எரிபொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் போதுமான அளவுக்கு எரிபொருள் வழங்கப் படாமையால், மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது. பல எரி பொருள் நிரப்பு நிலையங்க ளில் எரிபொருள்கள் இல்லை என்ற அறிவித்தல் பதாகையே காட்சிப்படுத்தப்பட் டுள்ளது.

இந்த முறை பெரும்போக நெற்செய்கை உரம், கிருமி நாசினிகளுக்கான தடையால் பெருமளவில் அழிவடைந்துள்ளது. குறைந்தளவு விளைச்சலைப் பெற்றும், அதனை அறுவடை செய்ய முடியா துள்ளனர். எரிபொருள்களைப்பெற்றுக் கொள்ள அறுவடை இயந்தி ரங்களுடன் நீண்ட வரிசையில் காத்திருப்பதை அவதானிக்க முடிந்துள்ளது. (ஒ-4,214,110,213)



## கசிப்புடன் பெண் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 2

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் 36 வயதான பெண் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய குறித்த பகுதியை முற்றுகையிட்டு சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்ட போது அவரிடமிருந்து 20 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது. (ஒ-ரி1,125)

## சதொசவில் 1 கிலோ மஞ்சள் ரூ.2,400

கொழும்பு,மார்ச் 2

சதொச ஊடாக ஒரு கிலோ கிராம் மஞ்சளை 2 ஆயிரத்து 400 ரூபாவுக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர தெரிவித்துள்ளார்.

சரக்குக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து சுமார் 4 லட்சம் கிலோ கிராம் மஞ்சள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

கிளிநொச்சி, மார்ச் 2

அக்கராயன் நாகதம்பிரான் கமக்கார அமைப்பின் விசேட பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை முற்பகல் 10 மணிக்கு ஸ்கந்தபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக நாகதம்பிரான் கமக்கார அமைப்பின் தலைவர் சி.கனகசபாபதி தெரிவித்துள்ளார். (ஒ-14,13)



## முல்லைத்தீவில் கடந்த மாதம் மட்டும் இரு யானைகள் சாவு

முல்லைத்தீவு,மார்ச் 2

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த மாதம் மட்டும் இரண்டு யானைகள் உயிரிழந்துள்ளன.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் காலில் குண்டுக் காயங்களுடன் நடக்க முடியாத நிலையில், கடந்த 18 ஆம் திகதி குளக்கரையில் வீழ்ந்து கிடந்த யானைக்கு, வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் சிகிச்சை யளிக்கப்பட்டது. குறித்த யானை சிகிச்சை பலனின்றி கடந்த திங்கட்கிழமை உயிரிழந்தது.

வனஜீவராசிகள் திணைக்கள மருத்துவரின் பரிசோதனையின் பின்னர், யானையின் உடலம் அடக்கம் செய்யப்பட்டது.

அத்துடன் கடந்த 15 ஆம் திகதி ஒதியமலைக் கிராமத்தில் மின்சாரவேலியில் சிக்கி யானை ஒன்று உயிரிழந்துள்ளது. (ஒ-4-19)

## நெற்செய்கைப் பாதிப்பு கைதடியில் நாளை பதிவு

சாவகச்சேரி, மார்ச் 2

தென்மராட்சி பிரதேச கமக்கார அமைப்புகளுக்குட்பட்ட விவசாய நிலங்களில் கடந்த காலபோக நெற்செய்கையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பதிவுகள் அந்தந்த கமநல சேவைகள் நிலையத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கமைய கைதடி, நாவற்குழி கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கான பதிவுகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் சேகரிக்கப்படவுள்ளன.

குறித்த அமைப்புக்குட்பட்ட விவசாயிகள் தமது தேசிய அடையாள அட்டை, ஏக்கர் வரிப் பற்றுச்சீட்டு, திரவ சேதனப்பசளை பெற்றுக்கொண்டமைக்கான பற்றுச்சீட்டு ஆகியவற்றுடன் வருகை தருமாறு அமைப்பினர் அறிவித்துள்ளனர். (ஒ-14,9)

## மருதங்குளத்தில் 160 ஏக்கரில் சிறுபோகம்

மருதங்குளத்தில் 160 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக விவசாயிகளுக்கு நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டு மருதங்குளம் உடைப்பெடுத்ததால் சிறுபோக நெற்செய்கைகள் பாதிக்கப்பட்டன. இதனால் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்த அந்தப் பகுதி விவசாயிகள் குளத்தைப் புனர மைக்குமாறு நீர்ப்பாசனத் திணைக் களத்துக்கு கோரிக்கை விடுத்தனர்.


அதற்கமைய உலக வங்கியின் 150 மில்லியன் ரூபா நிதியில் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் குறித்த குளம் புனரமைக்கப்பட வுள்ளது. குளம் புனரமைக்கப்படும் போது குளத்தின் அணைக்கட்டு உயர்த்தப்படும். இதன்போது குளத்தின் கீழ் சிறுபோகம் முழுமையாக மேற்கொள்ளமுடியும் என்பதோடு இந்த முறை 160ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-14)

## ஜேர்மன் கலாசார நிறுவன பணிப்பாளர் மேயர் மணிவண்ணனுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 2

இலங்கைக்கான ஜேர்மனியின் கலாசார நிறுவனப் பணிப்பாளர் ஸ்டீபன் விங்லர் யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணனைச் சந்தித்து உரையாடினார். இந்தச் சந்திப்பு யாழ். மாநகர சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் ஜேர்மன் மொழியை பயிற்றுவிப்பது தொடர்பாகவும் ஜேர்மன் கலாசார நிகழ்வுகளை இணைந்து மேற்கொள்வது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது என யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.



சந்திப்பின் நிறைவில் இலங்கைக்கான ஜேர்மனியின் கலாசார நிறுவனப் பணிப்பாளருக்கு யாழ்.மாநகர முதல்வரால் நினைவுப்பரிசு வழங்கப்பட்டது. (வ-20)

## 65 தென்னை மரங்களை துவம்சம் செய்த யானைகள்

முல்லைத்தீவு,மார்ச் 2

காய்க்கும் பருவத்தில் இருந்த 65 தென்னை மரங்களை காட்டு யானைகள் அழித்துள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் காட்டு யானைகள் மக்களின் வாழ்வாதாரப் பயிர்களை தொடர்ந்து அழித்து வரும் நிலையில், கடந்த திங்கட்கிழமை இரவு இரு வேறு இடங்களில் புகுந்த காட்டுயானைகள் பயன்தரு தென்னைமரங்களை அழித்துள்ளன.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்கு உட்பட்ட வள்ளிபுனம் கிரா மத்துக்குள்ளும், துணுக்காய் - கல்விளான் கிராமத்துக்குள் புகுந்த காட்டு யானைகள் பயிர்களை நாசம் செய்துள்ளன.

தற்போது நெல் அறுவடை முடிந்த நிலையில், யானைகள் மக்களின் வாழ்விடங்களை நோக்கி நகருகின்றன என்று மக்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-4-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஏதாவது...

மின் உற்பத்திக்குத் தேவையான எரிபொருளைத் தனியார் துறையினரிடம் இருந்தேனும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி பணித்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தலைமையில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் நாளாந்தம் நடைமுறைப்படுத்தப்படும் மின்வெட்டுத் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மின் உற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான எரிபொருளைப் பெற்றுக்கொள்ள மின்சார அமைச்சு பொருத்தமான திட்டங்களைத் துரிதமாகச் செயற்படுத்த வேண்டும் என்று அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அல்லது தனியார் தரப்புக்களிடம் இருந்து மின் நிலையங்களுக்குத் தேவையான எரிபொருளைப் பெற்றுக்கொள்ள ஜனாதிபதி மின்சார அமைச்சருக்குப் பணித்துள்ளார்.

எரிபொருள் கொள்வனவுக்குத் தேவையான டொலரை விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால், எதிர்வரும் 5ஆம் திகதிக்குப் பின்னர் மின்வெட்டை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் இருக்காது என்று நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச அமைச்சரவைக் கூட்டத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த மாதத்தின் இறுதி வாரமளவில் போக்குவரத்துச் சேவையில் நிலவும் நெருக்கடி நிலைமைக்குத் தீர்வு பெற்றுக்கொள்ள முடியும் என்றும் நிதியமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை, முன்னதாக நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எரிபொருள் கொண்டுவரும் கப்பல்களுக்குத் தேவையான டொலர் விடுவிக்கப்படும் என்று நிதி அமைச்சு உறுதியளித்திருந்தபோதும், இது வரை அந்த நிதி விடுவிக்கப்பட வில்லை என்றுவலுச்சக்திஅமைச்சர்உதயகம்மன்பில தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## திருவிழாவில் அறுத்த சங்கிலிகளை விழுங்கிய பெண்கள் சிகிச்சையில்!

யாழ்ப்பாணம், மார்ச் 2

திருநெல்வேலியில் உள்ள ஆலயம் ஒன்றின் தேர்த்திருவிழாவுக்கு வந்த பக்தர்களின் தங்கச் சங்கிலிகளை அறுத்தவர்கள், அவற்றை விழுங்கியதால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றின் தேர்த் திருவிழா நேற்று நடைபெற்றது. திருவிழாவுக்கு வந்த சிலரின் தங்கச் சங்கிலிகள் அறுக்கப்பட்டதை அடுத்து, பொதுமக்கள் பெண் ஒருவரை பிடித்துள்ளனர். அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் அவர் மேலும் 8 பேரை அடையாளம் காட்டினார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர்களை பொதுமக்கள் கோபப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். பொலிஸார் அவர்களைக் கைது செய்த நிலையில், அவர்களில் 3 பெண்கள் , தாம் திருடிய நகைகளை விழுங்கியுள்ளனர் என்று கூறப்படுகின்றது. அதையடுத்து அவர்களை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பொலிஸார் சேர்ப்பித்தனர்.

திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்கள் வேறு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-20-9)

## பெற்றோல் இறக்குமதிக்கு அனுமதி

கொழும்பு, மார்ச் 2

பெப்ரவரி 15 ஆம் திகதி தொடக்கம் 8 மாதங்களுக்கான 1.8 மில்லியன் பீப்பாய் பெற்றோலை இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இறக்குமதி நடவடிக்கைகளுக்காக நீண்டகால ஒப்பந்தத்தை மேற்கொள்ளும் பொருட்டு, பதிவு செய்யப்பட்ட விநியோகத்தர்கள் மற்றும் தற்காலிக பதிவுகளை பெற்ற விநியோகத்தர்களிடம் முறிகள் கோரப்பட்டுள்ளன என்று அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டு குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய, ஐக்கிய அரபு இராச்சியத்தின் நிறுவனம் ஒன்றிடம் நீண்டகால ஒப்பந்தத்தை வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (அ-எ-இ)

### வவுனியாவில்

## கையெழுத்துப் போராட்டம்



வவுனியா, மார்ச் 2

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக நீக்குமாறு கோரி வவுனியாவின் பல்வேறு இடங்களில் கையெழுத்துப் போராட்டம் தமிழரசுக்கட்சியால் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம் காலை 8.30 மணிக்கு வவுனியா பழைய பேருந்து நிலையத்திலும் பின்னர் இலுப்பையடி, செட்டிகுளம் உட்பட நகரின் சில பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற போராட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன், எம்.ஏ. சுமந்திரன், கட்சியின் செயலாளர் ப.சத்தியலிங்கம், வாலிபர் முன்னணித் தலைவர் கி.சேயோன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ம-ரி1,110)


## வேலையாட்கள் தேவை

நெல்லியடியில் அமைந்துள்ள உணவு கையாளும் நிறுவனம் ஒன்றிற்கு ஆண் வேலையாட்கள் தேவைப்படுகின்றனர். ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

வயது எல்லை 18 தொடக்கம் 30 வரை

074 2910759

(CS 18218) (3/6)


## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 12 - 12 - 1946 | 01 - 03 - 2022 |



### செல்லத்துரை கமலநாதன்

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் அம்பலவாணர் வீதி உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கமலநாதன் அவர்கள் நேற்று (01.03.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வசந்தராணியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னையா செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், வாசன் (லண்டன்), மயூரன் (கனடா), சுமிதா (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவனேஸ்வரி (லண்டன்), மயூரதா (கனடா), ஆனந்தரூபன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அஞ்சனா (லண்டன்), அஜீஸ் (கனடா), அக்ஷனா (கனடா), ஆதீஷ் (லண்டன்), ஆஷினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும், அமரர் பாலச்சந்திரன், புவனேந்திரன் ஆகியோரின் அன்புச்சகோதரனும், வசந்தமலர், ஜெயமலர், ஜெயதேவி, அமரர் விமலாதேவி, தவராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2022) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 18645) (4/6)

## கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலையில் கடமையாற்றும்
**திருமதி சாந்தா ராமச்சந்திரன்** அவர்களின்
பாசமிகு மாமியார்

### சீனியர் லட்சுமி (இரத்தினம்)

அவர்கள் இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பணியாளர் நலன்புரிச் சங்கம்,
அரசினர் சித்த போதனா வைத்தியசாலை

(ст.37176) (2.6)

## மரண அறிவித்தல்

தோற்றம் 08.04.1950 மறைவு 01.03.2022

### தவராசா ரதிதேவி



கோண்டாவில் வடக்கு சிவன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தவராசா ரதிதேவி நேற்று (01.03.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், செல்லத்துரை தவராசா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லத்துரை தையல்முத்து தம்பதியரின் அன்பு மருமகளும், பிரதீபன், ஜெனித்தா ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்றவர்களான யோகநாதன், நவபாலன் மற்றும் ரதிகுமாரி, ஶ்ரீகாந்தன் ஆகியோரின் அன்புச்சகோதரியும், அமரர் மகாலட்சுமி, ராணிமலர், கனகாம்பிகை, மகேந்திரராசா, மல்லிகாதேவி, மன்மதராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவராஜன், விஜி ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிஷா,சாருஜா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2022) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணிக்கு கோண்டாவில் கலைவாணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 786 0769
076 786 0769

(CS 18647) (4/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## எல்லாமும் நடகமே!

முல்லைத்தீவு சாலைக் கடற்கரைப் பகுதியில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதல் படகொன்று நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலையடுத்து மேற்படி படகு மீட்கப்பட்டது என்றும் அதை வெட்டிச்சோதனையிட்டபோது படகுக்குள் வெடிபொருள்கள் நிரப்பப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது என்றும் இராணுவத்தால் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது பொதுக்கூட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பித்துள்ள தருணத்தில், இந்தப் பொதுக்கூட்டத்தில் இலங்கையின் பொறுப்புக்கூறல் தொடர்பில் பல்வேறு அழுத்தங்கள் சர்வதேசத்தால் இலங்கைக்கு வழங்கப்படலாம் என்று கருதப்படும் நிலையில், இந்தப் படகு மீட்பும் அதன் பின்னரான காய் நகர்த்தல்களும் முக்கியத்துவம் மிக்கவையாகப் பார்க்கப்பட வேண்டியது தவிர்க்க முடியாததாகின்றது.

முல்லைத்தீவில் இராணுவப் பிரசன்னமும் நில அபகரிப்புக்களும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன. ஏன் இவ்வளவு பாரதூரமான வகையில் இராணுவப் பிரசன்னம் பேணப்படுகின்றது என்று அரசாங்கத்துக்கு எதிராக தமிழ்த் தேசியக் கட்சிகளும், மக்களும், புலம்பெயர் தமிழர்களும் போர்க்கொடி தூக்கி வருகின்றனர். பௌத்த மயமாக்கல், சிங்களத் திணிப்பு என்பனவுக்கு தமிழர் பகுதியில் இருந்த இயல்பான எதிர்ப்பு தொடர்ந்தும் இருக்கவே செய்கின்றது.

எல்லாவற்றையும்விட விடுதலைப் புலிகள் அமைப்பு அழிக்கப்பட்டுவிட்டதாகச் சொல்லப்படும் நிலையில் ஏன் இன்னமும் இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை வலுப்படுத்தி வைத்திருக்கின்றது? பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்பேரில் அப்பாவித் தமிழ் மற்றும் முஸ்லிம் இளைஞர்கள் சிறைப்படுத்தப்படுகின்றனர். அரசியல் பழிவாங்கல் நோக்கத்துக்காகவே அரசாங்கத்தால் பயங்கரவாதத் தடைச்சட்டம் முழுமையாகப் பயன்படுத்தப்படுகின்றது என்று பலரும் ஓரணியில் ஒன்றுதிரண்டு எதிர்ப்பை வெளிப்படுத்திவரும் நிலையில்தான் திடீரென 'தென்பட்டிருக்கின்றது' மேற்படி தற்கொலைத் தாக்குதல் படகு.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டம் நடைபெறும் காலப்பகுதியில், தமிழர் பகுதிகளில் இருந்து இவ்வாறான பொருள்கள் மீட்கப்படுவது இதுவொன்றும் முதல் முறையல்ல. கடந்த காலங்களிலும் இவ்வாறான சம்பவங்கள் தாராளமாக நடைபெற்றுள்ளன. ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டங்கள் ஆரம்பிக்கும் சமகாலப் பகுதியில், புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் தோட்டாக்கள் மீட்கப்படுவதும், மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கிகள் மீட்கப்படுவதும், புலிகள் தொடர்பான காணொலிகளை, ஒளிப்படங்களை வைத்திருந்தனர் என்று வழக்குகள் தொடரப்படுவதும் பழைய நாடகங்கள்தான். அந்த நாடக வரிசையில் இந்தப் படகு மீட்பும் ஓரங்கமாக அமைந்திருக்கின்றது.

இராணுவத்தினர் வெளிப்படுத்திய தகவல்களின்படி குறித்த படகு மண்ணுக்குள் புதைத்து வைக்கப்பட்ட நிலையில் இருந்துதான் மீட்கப்பட்டிருக்கின்றது. ஆனால், அந்தப் படகின் வெளித்தோற்றமும் – தரமும் 12 ஆண்டுகளுக்கும் மேலாக மண்ணுக்குள் புதைத்து வைக்கப்பட்ட நிலையில் இருந்த படகைப்போன்றதாக இல்லை. அத்துடன் படகில் ஆங்கில எழுத்துக்களுடன் கூடிய அடையாளப்படுத்தல்கள் இடம்பெற்றிருக்கின்றன. விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களுக்கும் இதர பொருள்களுக்கும் தமிழ்மொழி ரீதியிலான அடையாளப்படுத்தல்களையே வழங்கினார்கள். ஆக, அனைத்தையும் ஒரே நேர்கோட்டில் வைத்துப் பார்த்தால், புலிகள் மீளுருவாக்கம் தொடர்பான ஒரு விம்பத்தை சர்வதேச அவைகளில் உருவாக்குவதற்கான காய் நகர்த்தல்தான் இந்த 'பருவ கால' கண்டுபிடிப்புக்களா? என்ற நியாயமான சந்தேகம் ஏற்படவே செய்கின்றது. ஆனாலும், இப்படியான இட்டுக்கட்டான சோடிப்புகளைக்கூட இந்தக் கையாலாகாத அரசாங்கத்துக்கு நேர்த்தியாகச் செய்ய முடியவில்லையே! அதனால் பிழையைக்கூட சரியாகச் செய்யத் தெரியாத இந்த அரசாங்கமும் அதன் படைகளும் சரியானவைகளை எப்படிச் சீராக அணுகும் என்று நம்புவது?

### நாளொரு நல்வார்த்தை

"எல்லா ஆற்றல்களும் உங்களுக்கு உள்ளது என்று எண்ணுங்கள் எதையுமே உங்களால் சாதிக்க முடியும் என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள்". –அப்துல் கலாம்




ரஷ்யாவைத் தளமாகக் கொண்ட

## இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படக்கூடாது

### ரஷ்யப் பிரதி அமைச்சரிடம் அமைச்சர் பந்துல வலியுறுத்து

**கொழும்பு, மார்ச் 2**

**ரஷ்ய சந்தையை இலக்காகக் கொண்ட இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு தற்போதைய சூழ்நிலையில் எந்தவிதப் பாதிப்பும் ஏற்படக் கூடாது. இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் இராஜ தந்திர உறவைப் பேணுவது அவசியமாகும் என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன ரஷ்யாவின் பிரதியமைச்சர் அலெக்ஸி வி.குஸ்தேவிடம் வலியுறுத்தினார்.**

வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கும், ரஷ்யாவின் கைத்தொழில் மற்றும் வர்த்தக பிரதி அமைச்சர் அலெக்ஸுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் கொழும்பில் உள்ள வர்த்தகத்துறை அமைச்சில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பிலேயே வர்த்தகத்துறை அமைச்சர் இவ்வாறு வலியுறுத்தினார்.

இலங்கையின் தேசிய உற்பத்திகளுக்கு ரஷ்யாவின் சந்தையில் முன்னுரிமை வழங்க வேண்டும், இலங்கைக்கும் - ரஷ்யாவுக்கும் இடையிலான வர்த்தகத் தொடர்பை விரிவுபடுத்துமாறும் ரஷ்யாவின் கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை பிரதியமைச்சரிடம் பந்துல மேலும் வலியுறுத்தினார். (ம)

## அந்நியச் செலாவணி நெருக்கடி இரு நிறுவனங்களுடன் பேச்சு

கொழும்பு,மார்ச் 2

இலங்கையில் அந்நியச் செலாவணி நெருக்கடி மோசமடைந்துள்ளதால், கடன் வழங்கும் நிறுவனங்களாகிய சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலகவங்கி ஆகியவற்றுடன் பேச்சு நடத்தப்படவுள்ளது.

வருடாந்த - வசந்தகால அமர்வுகள் ஏப்ரல் மாதத்தில் இடம்பெறும்போது நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச அங்கு செல்லவுள்ளார்.

இலங்கையின் தற்போதைய தீவிர பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளுவதற்கான ஆதரவுச் சாத்தியவளம் தொடர்பில், இரு நிறுவனங்களுடனும் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

பேச்சு வெற்றியடையும் பட்சத்தில் அரசும், சர்வதேச நாணய நிதியத்துக்குமிடையில் பொருளாதாரத்தை ஸ்திரநிலைப்படுத்துவதற்கு அந்நியச் செலாவணியை உட்புகுத்துதல் மற்றும் சிக்கன நடிவடிக்கைகளை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட வகையிலான நிகழ்ச்சித்திட்டமொன்று வகுக்கப்படும்.

கொரோனாவால் 6 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டுக்கடன் இந்தவருடம் மாத்திரம் செலுத்தவேண்டியுள்ளது.

இதன் பின்னணியில் நாடு எதிர்நோக்கும் பொருளாதாரச் சிக்கலிலிருந்து விடுபடவே இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

இதேவேளை இந்தியாவிடமிருந்து எரிபொருள், உணவு மற்றும் மருந்துப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் அவசரகாலக் கடன் உதவியைப் பெறும் வகையில் திட்டமிடப்பட்டிருந்த நிதியமைச்சரின் பயணம் இறுதி நேரத்தில் கைவிடப்பட்டுள்ளது. (ஒ-4,இ)

நாளை 03.03.2022 வியாழக்கிழமை மாசி 19

சுபநேரம் : 07.57 - 09.27

ராகுகாலம்: 01.57 - 03.27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 08 . 12 . 1986

மறைவு 27 . 02 . 2022

## யோகரட்ணம் பிறின்சி

மானிப்பாய் வடக்கு இராஜகாரியர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோகரட்ணம் பிறின்சி கடந்த (27.02.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் யோகரட்ணம் நாகலட்சுமியின் அன்பு மகளும், சஜீவ், அஜித் ஆகியோரின் பாசமிகு தங்கையும், சுகிர்தாவின் மைத்துனியும், அக்ஷயா, சஜனிகா ஆகியோரின் பாசமிகு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மானிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகனம் :
குடும்பத்தினர்.
(கம்சன்)

(CS 18648) 1-6

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 16 . 12 . 1998

மறைவு 31 . 01 . 2022

## அமரர் சிவகணநாதன் திவாஹரி

(சப்பிரகமுவ பல்கலைக்கழக இரண்டாம் வருட மாணவி)

எங்கள் அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய இறைபதம் அடைந்த எங்கள் குடும்ப ஒளிவிளக்கு திவாஹரியின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (02.03.2022) முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் பிரிவுச் செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும் மலர்வளையங்கள் பதாகைகள் சார்த்தியும் அஞ்சலி செலுத்திய அன்புக்குரிய உற்றார், உறவினர் நண்பர்களுக்கும் மற்றும் அன்னாரின் இறுதி யாத்திரையில் கலந்துகொண்ட அனைவருக்கும் இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

" எம் ஆயுள் உள்ளவரை உன் நினைவுகள்
எம் மனதில் வலிகளாக தொடரும் திவாஹரி "

இணுவில் மேற்கு,
இணுவில்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

# அதிகாரப் பகிர்வை நீக்கினால் மக்கள் போராட்டம் வெடிக்கும்

## திஸ்ஸ விதாரண எச்சரிக்கை


**கொழும்பு, மார்ச் 2**

**"புதிய அரசமைப்பில் அதிகாரப்பகிர்வு என்ற விடயம் நீக்கப்பட்டுவிடுமா என்ற சந்தேகம் வடக்குத் தமிழ் மக்கள் மத்தியில் நிலவுகின்றது. எனவே, அதிகாரப்பகிர்வில் கைவைத்தால் மக்கள் போராட்டம் வெடிக்கக்கூடும்." இவ்வாறு அரச பங்காளிக்கட்சியான லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண தெரிவித்தார்.**

யாழ். ஊடக மையத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு, சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும். புதிய அரசமைப்பு இயற்றப்படும்போது, நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள 13 ஆவது திருத்தச்சட்டம் உள்ளடக்கப்படமாட்டாது, அதிகாரப்பகிர்வு கைவிடப்படும் என்ற அச்சம் மக்கள் மத்தியில் நிலவு கின்றது. அந்த நிலைமை ஏற்படுமானால் போராட்டம் வெடிக்கக்கூடும். இந்த விடயத்தை மனதில் வைத்து அரசு செயற்பட வேண்டும். அதிகாரப்பகிர்வு தக்கவைக்கப்பட வேண்டும்.



நாட்டில் பயங்கரவாதம் இருந்தபோதே பயங்கரவாத தடைச்சட்டம் தேவைப்பட்டது. தற்போது அந்தப் பிரச்சினை இல்லை. மக்கள் அமைதியாக வாழ்கின்றனர். எனவே அந்தச் சட்டம் முழுமையாக நீக்க[illegible] கட்சியின் [illegible] - என்றார்.

(எ-44)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 28 . 01 . 1950

மறைவு 31 . 01 . 2022

## அமரர் செல்லையா தவராசா

(ஓய்வு நிலை கணித ஆசிரியர், முன்னாள் உதவி அதிபர், கடமை நிறைவேற்று அதிபர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)

கடந்த (31.01.2022) திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்த அமரர் செல்லையா தவராசா அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று முன்தினம் (28.02.2022) திங்கட்கிழமை காலை 06.00 மணிக்கு கீரிமலை புனிதத் தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (02.03.2022) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது அன்புத் தந்தையாரின் மறைவுச் செய்தியறிந்து எமது துயர் பகிர நேரில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அனைவரிற்கும், தொலைபேசி, முகநூல் வாயிலாகவும், பதாகைகள், மலர் வளையம் மூலமாகவும் அஞ்சலி செலுத்தி ஆறுதல் தெரிவித்தோர்க்கும், மற்றும் பலவழிகளிலும் உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எம் குடும்பம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

[illegible] கோவிலடி,
[illegible] கே.எஸ் வீதி,
கொக்குவில் கிழக்கு

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிறப்புச்சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் நடைபெற்று வரும் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும்' என்ற தொடரின் 9 ஆவது சொற்பொழிவு, எதிர்வரும் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நெல்லண்டை அம்மன் அறநெறிப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நாவலர் குருபூஜை, மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து.

"நாவலர் பெருமானின் கல்விப்பணி" என்ற தொனிப்பொருளில் இளம் சைவப்புலவர் ச.நவநீதன் சிறப்புச்சொற்பொழிவை ஆற்றவுள்ளார். அத்துடன் சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

(ஓ-14)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 2

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்தச் சிறப்புச்சொற்பொழிவு, நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில், தலைமையுரையை பரிபாலன சபைத்தலைவர் த. சோதிலிங்கமும் சிறப்புச்சொற்பொழிவை "என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத்தமிழ் செய்யுமாறே." என்ற கருப்பொருளில் சைவப்புலவர் கா.கமலநாதனும் ஆற்றவுள்ளனர். (ஓ-14)

## விண்ணப்பம் கோரல்

கொழும்பு, மார்ச் 2

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தால் தொழில்நுட்ப கணிதம் தொடர்பான முதுவிஞ்ஞானமாணி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பலாம். மேலதிக விவரங்களை, http://graduate.sjp.ac.lk. என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(ஓ-14)

* * *

கொழும்பு, மார்ச் 2

கொழும்பு பல்கலைக்கழகச் சட்ட பீடத்தால் அறிவுசார் சொத்துரிமைச்சட்டம் தொடர்பான சான்றிதழ் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பலாம். மேலதிக விவரங்களை www.law.cmb.ac.lk. என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(ஓ-14)


மக்கள் வங்கியின் ஊடாக அந்நிய செலாவணியை இலங்கைக்கு அனுப்பிய வெற்றியாளர்கள்




2022 பெப்ரவரி 1 - 14

தலா ரூ.10,000/- வென்ற நாளாந்த வெற்றியாளர்கள்

| வெற்றியாளர்கள் | இடம் | வெற்றியாளர்கள் | இடம் |
|---|---|---|---|
| ஊ.சி. ஜயவீர | பத்தேகம | ஆர். சரஸ்வதி | மாத்தளை |
| ஏ.டபிள்யூ. டபிள்யூ. ஆரச்சிலா | அம்பலாந்தோட்டை | எஸ். அருள்வண்ணன் | கிளிநொச்சி |
| எம்.எம்.எஸ். சில்வா | போப்பிட்டிய | எம்.ஜி.என்.எச். ஆனந்த | பல்லேபொலை |
| எச்.என்.டபிள்யூ.எம். நிலந்த | ராகமை | டபிள்யூ.பி.எல்.என். பெரேரா | சீதுவை |
| ஏ.எல்.ஊ.எம். அமரசிங்ஹ | வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள் | சி.கே.டி. வர்ணகுலசூரிய | மேல் சத்தாம் வீதி |
| எம்.எ.்.ப்.எ.்.ப்.்.பஸ்மினாஸ் | கட்டுகஸ்தோட்டை | இ. சித்தி சஹீலா | கிண்ணியா |
| ஐ.கே. ரேனுகா | செங்கடகலை | எஸ்.எல். சூரிய ஆரச்சி | அகலவத்தை |

22k தங்கப்பவுணை வென்ற வாராந்த வெற்றியாளர்கள்

| வெற்றியாளர் | இடம் | வெற்றியாளர் | இடம் |
|---|---|---|---|
| ஏ. அன்னம்மா | முருங்கன் | டபிள்யூ.பி. ரேனுகா பியசீலி | கொபேகனை |

நாளாந்த, வாராந்த, மாதாந்த சீட்டிழுப்பிலும், வருட இறுதியில் நடைபெறும் மாபெரும் சீட்டிழுப்பிலும் கீழ் குறிப்பிட்டுள்ள பண உள்வரவுகள் (Remittances) அனைத்தும் தகுதி பெறும்.

- மக்கள் வங்கிக் கணக்கிற்கு அனுப்பும் பண உள்வரவுகள்.
- மக்கள் வங்கியூடாக வேறு ஏதேனுமொரு வங்கிக் கணக்கிற்கு அனுப்பும் பண உள்வரவுகள்.
- மக்கள் வங்கியின் கருமபீடங்கள் ஊடாக பெறப்படும் பண உள்வரவுகள்.

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK

Pride of the Nation


# அதிகாரியின் வருகைக்காக காத்திருந்த கர்ப்பிணிகள்

### பாதுகாவலருடன் முரண்பாடு

உயர் அதிகாரியின் உத்தரவால், மருத்துவமனையின் வெளிக்கதவைத் திறக்க பாதுகாப்பு அலுவலர் மறுத்ததால், அங்கு முரண்பாடு ஏற்பட்டது. இந்தச் சம்பவம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. மருத்துவமனையின் விபத்து சிகிச்சைப் பிரிவில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்தையடுத்து, தனது அனுமதியின்றி வெளிக்கதவின் ஊடாக, வாகனத்தில் வரும் நோயாளர்களை உள்ளே அனுமதிக்கவேண்டாம் என்று மருத்துவமனை உயர் அதிகாரி பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு உத்தரவு பிறப்பித்திருந்தார். இந்த நிலையில் சம்பவத்தன்று கர்ப்பிணிகளுக்கு கிளினிக் இடம்பெற்றதால், வெளிக்கதவு ஊடாகச் செல்வதற்கு மோட்டார் சைக்கிள்களில் சிலர் வருகை தந்துள்ளனர். எனினும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்ட உத்தியோகத்தர் மேலிடத்திலிருந்து உத்தரவு வரும் வரை கதவு திறக்கமுடியாது என்று கூறியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த சிலர் பாதுகாப்பு உத்தியோகத்தருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, அவரைத் தாக்க முற்பட்டுள்ளனர். அங்கு வந்த பொலிஸ் உத்தியோகத்தர் நிலைமையைச் சமாளித்து மோதல் இடம்பெறாமல் தடுத்துள்ளார். (ஓ-4-9)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் 3,389 பேருக்கு காணிகள் இல்லை


முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 6 பிரதேச செயலர் பிரிவுகளின் கீழ் 3 ஆயிரத்து 389 பேருக்குக் காணிகள் இல்லை என மாவட்டச் செயலகப் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-14-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்தை உடைப்போம் இல்லார்க்கு இரங்குவோம்

## இன்று தவக்காலம் ஆரம்பம்



அனைத்துலக கிறிஸ்தவ மக்களும் இன்றைய திருநீற்றுப் புதன் திருவழிபாட்டுத் திருப்பலிச் சடங்குடன் மீண்டுமொரு தவக்காலத்தினுள் நுழைகின்றனர். இந்தத் தவக்காலத்தின் நோக்கமானது கிறிஸ்து மனித விடுதலைக்காக பாடுகள், மரணத்தை ஏற்று உயிர்ப்பின் வழியாக புது வாழ்வைத் தந்த தியாகத்தை சிரம்தாழ்த்தி நினைவேந்தி எம்மைத் தயார்ப்படுத்துவதாகும்.

இந்தத் தவக்காலமானது வருடாவருடம் வந்துபோகும் ஒரு கொண்டாட்டமல்ல. எமது கடந்த கால பயணத்தை சீர்தூக்கிப் பார்த்து நின்று நிதானித்து முடிவெடுக்க அழைப்புவிடுக்கும் மனமாற்றத்தின் காலமாகும். இறைவன் விசேட விதமாக எம்மீது இரக்கத்தைப் பொழிய எம் மத்தியில் பிரசன்னமாகும் அருளின் காலமாகும். தவக்காலம் ஒப்புரவின் காலம், மீட்பின் காலம் என்றும் அழைக்கப்படுகிறது. முழு உலகத்தையும் போர்மேகங்கள் சூழ்ந்து பேரழிவுகளை ஏற்படுத்துமோ என்ற அச்சம், விலைவாசி உயர்வு, அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாடு மற்றும் பொருளாதாரப் பின்னடைவுகளால் ஏற்பட்ட வாழ்வாதார நெருக்கடி, கண்ணுக்குத் தெரியாத கொரோனா வைரஸின் கொலைவெறித் தாக்கம், இனவெறி, மொழிவெறி, நிறவெறி என பல முனைத் தாக்கங்கள் மத்தியில் நாம் சந்திக்கும் இந்தத் தவக்காலம் தகுந்த முறையில் நோன்பை அனுசரிக்க சந்தர்ப்பங்களைக் கைகொடுப்பதே காலத்தின் தேவையாக அமைகிறது.

கூட்டொருங்கியக்க திருஅவையாக அனைவரின் கருத்துக்களையும் உள்வாங்கி ஒன்றிப்பு, பங்கேற்பு, மறைப்பணி என்ற தலைப்புக்களில் உலக ஆயர்கள் ரோமாபுரியில் ஒன்றுகூடி கலந்துரையாடி முடிவுகளை மேற்கொண்டு புதிய பாதையில் திருஅவையை வழிநடத்துவதே ஆயர்கள் மாமன்றத்தின் நோக்கமாகும்.

ஒன்றிப்பு - நாம் அனைவரும் வேறுபாடின்றி ஒரே தந்தையின் பிள்ளைகளாக வாழ்தல், பங்கேற்பு - ஒருவருக்கொருவர் செவிமடுத்து அனைவரும் ஈடுபாடுள்ள பங்களிப்பு செய்தல், மறைப்பணிநற்செய்திக்கு நற்சான்று பகர்ந்து தேவைக்கேற்ப பணிசெய்தல். கூட்டொருங்கியக்க கருப்பொருளும் தவக்கால கருப்பொருளும் ஒத்திசைவாக இருப்பதை அவதானிக்கமுடிகிறது. இவற்றை நாம் தகுந்தமுறையில் முன்னெடுக்க வெளிவேடமற்ற உண்மையான மனமாற்றமே உதவும்.

இப்பொழுதாவது உண்ணாநோபிருந்து அழுது புலம்பிக்கொண்டு உங்கள் முழுஇதயத்தோடு என்னிடம் திரும்பிவாருங்கள். நீங்கள் உங்கள் உடையை அல்ல இதயத்தைக் கிழித்துக் கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள். அவர் அருள் நிறைந்தவர். இரக்கம் மிக்கவர். நீடிய பொறுமையுள்ளவர். பேரன்புமிக்கவர்.

தவம் என்பது காவியுடை தரிப்பதும் முகவாட்டமாக இருப்பதும் அல்ல. மாறாக இதயத்தை உடைப்பது. அதிலிருந்து அன்பு, பிரிவு, இரக்கம், மன்னிப்பு, சமத்துவம், பகிர்வு போன்றவற்றை பிறர் சுவைக்கக் கொடுப்பது. இல்லார்க்கும், இயலார்க்கும் கைகொடுப்பது. ஆசைவலைகளில் அகன்று வேடமில்லா, கபடமில்லா இன, மத, பேதமில்லாவாழ்வு வாழ்வது. ஆனால், நாம் பகட்டிலும், ஆடம்பரத்திலும் சமூக கௌரவம் தேடி மாயச் சிந்தனையில் மயங்கி கிடக்கின்றோம்.

ஆடம்பரம் அகற்றி அளவோடு அனுபவித்து, எளிமையைக் கடைப்பிடித்து, எழைகளைத் தாங்கி நிற்பதே உண்மையான தவம் என உணரத் தவறிவிடுகின்றோம். ஈதல், இறைவேண்டல், நோன்பிருத்தல் ஆகிய செயல்களை புதிய கோணத்தில் முன்னெடுக்க அழைக்கும் இயேசுவின் பார்வையை எமதாக்குவோம். பக்திச் செயல்கள் தம்பட்டம் அடிப்பதற்கல்ல. எமக்குள் எம்மைத் தேடி நான் என்ற மன நிலையைவிட்டு நாம் என்ற பொதுநிலைக்கு எம் ஒவ்வொருவரையும் கொண்டுவரத் தேவையான அருமருந்து அவை என்றுணர்வோம். நம் அக ஆன்மிகம் இயேசுவின் ஆன்மிகமாகி நம்மில் ஒளிரட்டும். என் உடன் வாழ்வோர் சமூகத்தோர், திருஅவை, நாடு உலகம் என்ற பார்வையில் மகிழ்ச்சியும், உயர்ச்சியும், அமைதியும், சமத்துவமும் உருவாக என்னையே சாம்பலாக்க சம்மதிக்கின்றேன் என்பதன் அடையாளமாக இன்று நெற்றியில் ஏற்ற தவத்தலத்தின் மீது உறுதியுரை எடுத்து செயலாற்ற முயற்சிப்போம்.

**எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை**

## ஆசிரியருக்கு கடிதம்

### ஜனநாயகம், மனித உரிமைகள் அரச பயங்கரவாத முகக்கவசமா?

1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரத்துக்குப் பின் அன்றைய ஆட்சியாளர்களால் குடியுரிமைச்சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன் விளைவு ஆறேகால் இலட்சம் இந்திய வழித்தோன்றல் தமிழ்மக்கள் நாட்டிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டார்கள். 1956 ஆம் ஆண்டு பண்டாரநாயக்கவின் ஆட்சியில் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதன் விளைவாக நூற்றுக் கணக்கான தமிழ் ஊழியர்கள் வேலை இழந்தார்கள்.

1958 ஆம் ஆண்டு இனக்கலவரத்தால் நூற்றுக் கணக்கானவர்கள் உயிரிழக்கவும் பல்லாயிரக் கணக்கானவர்கள் இடம்பெயர்ந்ததுடன் சொத்திழப்புக்களையும் சந்தித்தனர். அத்தோடு தமிழருக்கெதிரான பல சட்டங்களும் ஆட்சியாளர்களால் கொண்டுவரப்பட்டன. அத்துடன் 77, 83 இனக்கலவரங்களும் ஆட்சியாளர்களின் உறுதுணையில் நடந்தேறின. ஆட்சியாளர்களின் சட்டங்களுக்கு எதிராகத் தமிழ் மக்களால் மேற்கொள்ளப்பட்ட அகிம்சைவழிப் போராட்டங்கள் விழலுக்கு இறைத்த நீராகிவிட்டது. இந்த நிலையிலேயே ஆயுதப் போராட்டம் தலை எடுத்தது. இதை முறியடிப்பதற்கு ஜனநாயக நாடுகள் மனித உரிமை அமைப்புக்கள் அத்தனையும் ராஜபக்சக்களின் ஆட்சிக்குத்துணை போனார்கள்.

இதில் ஐ.நா.சபையும் விதிவிலக்கல்ல. உரிமைகளைப்பறிப்பது ஜனநாயகம். உரிமையைக் கேட்பது பயங்கரவாதம். இனப்படுகொலை போர் முடிவடைந்து இற்றைக்கு 12 வருடங்களாகியும் உரிமை பறிக்கப்பட்ட, பறிக்கப்படும் மக்களுக்கு ஆக்கபூர்வமான திட்டம் எதுவுமே கிட்டவில்லை. இதில் ஜனநாயகவாதிகள், மனித உரிமையாளர்கள், ஐ.நா.சபை எல்லாமே ஆட்சியாளர்களின் கைப்பொம்மைகளாகவே இருந்திருக்கின்றன.

இந்த நிலைமையில் எம்மினத்து மாபியாக்களும் அரச பயங்கரவாதத்துக்குக் கைத்தாளம் போட்டுப் பக்கப்பாட்டும் பாடுகிறார்கள். இந்த வேடதாரிகளிடம் இருந்து தமிழினத்துக்கு விமோசனம் கிட்டுமா? அல்லது நிரந்தர அடிமை வாழ்வா? இதை மனித உரிமையாளர்கள் சிந்திப்பார்களா? இவ்விடயத்தில் மொத்தத்தில் எல்லா அமைப்பினரும் கண்ணிருந்தும் குருடர்களாகவே நடந்து கொள்கிறார்கள் என்பதுதான் உலகறிந்த உண்மை.

**ப.யேசுபாதம்**

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** நீங்கள் வாழ்வில் முன்னேறுவீர்கள். பேச்சில் கவனம் தேவை. நினைத்த வேகத்தில் சில வேலைகளைச் செய்து முடித்துவிடுவீர்கள். முயற்சியில் ஏற்பட்டிருந்த தடை நீங்கும். நேர்மை கூடும்.

**இடபம்:** நண்பர்கள் மூலம் நீங்கள் விரும்பிய சுபச்செய்திகள் வரும். செலவினங்கள் அதிகரிக்கும். உங்கள் குடும்ப எதிரியைத் திறம்பட எதிர்கொண்டு வெல்வீர்கள்.

**மிதுனம்:** தாமதமாகிக் கொண்டிருந்த பணம்கைக்கு வரும்.முந்தைய நாளில் இருந்து வந்த மனஉளைச்சல் தீரும். பேச்சினால் பிரச்சினை வராமல் இருக்க கவனமாக இருங்கள்.

**கடகம்:** கோபத்தை அடக்கி, அனுசரிக்க நன்மை உண்டாகும். கால தாமதமாகக்கூடும் பொறுமைக்குப் பரிசு கிடைக்கும். உங்களது வாழ்வில் நல்ல திருப்பம் உண்டு.

**சிம்மம்:** செலவுகள் குறையும். கருணை மிக்க சிந்தனைகள்கூடும் தனிப்பட்டமுறையில்தேவையானபொருள்கள் வாங்குவீர்கள்.வியாபாரிகளுக்கு சந்தோஷமும் வெற்றியும் கிடைக்கும்.

**கன்னி:** குழந்தைகள்மூலம் மகிழ்ச்சிகரமான விடயம் நடக்கும்.பணியாளர்களுக்கு மேலதிகாரியை பற்றி இருந்த வருத்தம் நீங்கும்.மற்றவர்களிடம் கனிவாகப்பழகி நல்ல பெயர் எடுப்பீர்கள்.

**துலாம்:** வருமானம் பெருகும். நண்பர்கள் மூலம் நன்மை கிடைக்கும்.நீண்ட காலத் தடைகள் விலகி, நல்ல வாய்ப்பை பெறுவீர்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நேற்றைய வருத்தங்கள் தீரும்.

**விருச்சிகம்:** உயர்ந்தோர் ஆலோசனையுடன் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.பேச்சிலும், செயலிலும் கவனமாக இருப்பது நல்லது.உங்களுக்குக்கீழ்வேலைபார்ப்பவர்களின் ஆதரவு கிடைக்கும்.

**தனுசு:** கடன் வாங்குமுன் பலமுறை யோசித்துவிட்டு வாங்குங்கள்.வீட்டிலும், பணியிடத்திலும் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பணியாளர்களுக்கு உயர் அதிகாரியுடன் எதிர்பாராத சந்திப்பு உண்டு.

**மகரம்:** பணியிட இரகசியங்கள் கசியாமல் இருக்க கவனமாக இருங்கள். செல்வாக்கு, புகழ் அதிகரிக்கும்.சகிப்புத்தன்மை கூடும். பணியில் அலட்சியம் வேண்டாம்.

**கும்பம்:** முன்கோபத்தை தவிர்க்க வேண்டும். பயம் நீங்கும்.உறவினர், நண்பர்களுடன் கருத்து வேறுபாடு உண்டாகலாம்.வேலையில் நிதானம் தேவை. குடும்பத்தில் சந்தோஷம் நிலவும்

**மீனம்:** தொழில், வியாபார விடயத்துக்கான முயற்சிகள் தொடரும். கூடுதல் முயற்சியின்மூலம் உங்களுக்கு வெற்றிகிடைக்கும். அதிகம் உழைப்பீர்கள். நற்பலன் கிடைப்பதால் சிரமம் குறையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈரவிழிகளுடன் மூவாண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
23 . 04 . 1940



வேரக்கேணியான் அடியில்
06 . 03 . 2019

## அமரர் பேரம்பலம் நடேசபிள்ளை

வேரக்கேணியான் அடிதனை
பற்றி மூவாண்டு ஆயிடினும்
நாளெல்லாம் சுமந்து வரும் - உம்
நினைவுகளை எம் மனம் தன்னில்...
நினைக்காத வேளையில்லை வருந்தாத நாளில்லை
உம்மிடத்தை ஈடுசெய்ய யாரும் இல்லையே அப்பா!
நீர்விட்டுச் சென்ற மண்கூட உம்மைத்தான் தேடுதப்பா!
கலங்கி நாம் நிற்கின்றோம் கண்முன்னே தான் வருவீரோ..


என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்

"நாகபவனம்"
மட்டுவில் மத்தி, சாவகச்சேரி.

(CS 43274) (3/6)

## மரண அறிவித்தல்

பிறப்பு
27 - 02 - 1932



இறப்பு
01 - 03 - 2022

### இராமசாமி நாகேஸ்வரி

மாதகலைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பளை மற்றும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி நாகேஸ்வரி அவர்கள் நேற்று (01.03.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாச்சலம் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராமசாமி (ஓய்வுபெற்ற மலேசிய ரயில்வே உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொன்னர் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற துரைச்சாமி என்பவரின் பாசமிகு சகோதரியும், யோகேஸ்வரி, குணதாசன் (நோர்வே) ஆகியோரின் அன்புத்தாயாரும், தனபாலசிங்கம், யோகாதேவி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிரதீப், பானுகா, யகோவன், டிஷாந், கிருஷாந்தி, பிரவீனா, ஜீவிகா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2022) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15/7, அரசடி வீதி,
திருநெல்வேலி கிழக்கு
யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்
074 241 6141
074 091 1949

(CS 18646) (4/6)

## மரண அறிவித்தல்

தோற்றம்
11 . 06 . 1930



மறைவு
01 . 03 . 2022

### திருமதி தவமணி சின்னத்தம்பி
### (ஆச்சி)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், மல்லாகம், நல்லூர், தாவடி, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தவமணி சின்னத்தம்பி அவர்கள் நேற்று (01.03.2022) செவ்வாய்க்கிழமை கனடாவில் சிவபதமடைந்தார்.

அன்னார் மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான துரையப்பா, பாக்கியம் தம்பதிகளின் அருமைப்புதல்வியும், சுழிபுரத்தைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான குமாரு, இத்தினிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் பத்மினி (தாவடி), ரஞ்சினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், இந்திரதாஸ் (தாவடி), வரதராஜன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், மலேசியவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம், நவமணி, இராசமணி மற்றும் தில்லைநாதன் (கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்ற நிஷாந்தி மற்றும் ஜனனி ரமேஷ், சைந்தவி கேதீசன், சாத்வீகன் தனுசா, நிருபா கஜன், கோகுலன் சரீனா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், காலஞ்சென்ற திரேக்கா மற்றும் மதி, பைரவி, அனுஷ்கா, அவிஷகா, அசான், நிஷா ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.


இந்திரவாசம், தாவடி
021 205 2606

தகவல்
குடும்பத்தினர்

(CS [illegible]) (3/6)

## மரண அறிவித்தல்

பிறப்பு
11 . 09 . 1930



இறப்பு
28 . 02 . 2022

### செல்லையா நீக்கிலஸ் செல்வநாயகம்
(முன்னாள் றஞ்சித் கதிரை வாடகை - உரிமையாளர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நீக்கிலஸ் செல்வநாயகம் (28.02.2022) திங்கட் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - ரோணிக்கா தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற மரியாம்பிள்ளை அலோசியஸ் நல்லையா - மரியம்மா செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மேரிதிரேசா அவர்களின் அன்புக் கணவரும், ஜோசப் மரியதாஸ், றெஜி ராஜேந்திரா, றெமிசியஸ் லோயலா, றேமன்போல், காலஞ்சென்ற யூட் றஞ்சித் மற்றும் யூடித்மேரி ஆன், றெனி றூபக்குமார், சிறில் றஞ்சித் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம், குணரட்ணம், ஸ்ரனிஸ்லஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
சிறில் - 021 222 9562
யூடி - 0033 7833 24160

இல.44, மாட்டீன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(cs 37175) (2/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27 ஆவது பிறந்த தினத்தில் விண்ணக வாழ்வின் 6 ஆம் மாத நினைவலைகளும் நன்றி நவிலலும்

## அமரர் ஞானப்பிரகாசம் பிரகாஸ்

(சுயாதீன ஊடகவியலாளர்)

விதையாய்
02.03.1995

தூபமாய்
02.09.2021




பிரகாஸ்!
இன்று உன் பிறந்தநாளடா! - ஆனால்
இன்று நீ எம்மோடு இல்லையடா...
நீ எம்மைப் பிரிந்து சென்ற
6ஆம் மாதத்தில் கண்ணீரோடு
உன்னை நினைக்கின்றோம்...
என்றும் வற்றாத உன் புன்னகையை
எப்போ மீண்டும் காண்போம்...
பூமியில் வாழ்ந்த காலம் வரையிலும்
புரட்சியாளனாய் வாழ்ந்த நீ - விண்ணிலும்
நிரந்தர நிம்மதியுடன் வாழ்ந்திடடா
எமக்காயும் வேண்டிடடா...

எங்கள் வீட்டு செல்வத்தின் திடீர் பிரிவு பேரிடியாய் எம் நெஞ்சை பிளந்த வேளையில் அச் செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி, அலைபேசி வாயிலாகவும் சமூக வலைத்தளங்கள், ஊடகங்கள் வாயிலாகவும் இரங்கல்களை தெரிவித்து பல்வேறு வழிகளில் எமக்கு உதவி செய்து அருகிருந்து ஆறுதலளித்த அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், ஏனைய மதத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், ஊடக அமையங்கள், ஊடக நண்பர்கள், உறவுகள், நண்பர்கள், அறிமுகமானவர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

என்றும் உன் நினைவுகளுடன்
அப்பா, அம்மா,
பெரியண்ணா, சின்னண்ணா,
அக்கா, அத்தான்.

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
04.09.1945

மறைவு
27.02.2022

S.V. Murugesu நிறுவன உரிமையாளரின் மருமகன்

## திரு. ஐங்கரன்

(பொறியியலாளர்)

அவர்களின் அன்புத் தந்தையார்

## திரு. நாகலிங்கம் தர்மலிங்கம்

(லிங்கம் ஸ்டோர்ஸ் உரிமையாளர்)

எல்லோருக்கும் நல்லவனாக மனித நேயத்துடன்
உதவும் உத்தமரே, சொல்லமுன் ஓடிவந்து
துன்பம் போக்கும் சேவையாளரே!
உன் பிரிவால் வேதனையுடன் கண்ணீர் சொரிகின்றோம்.

அன்னாரின் பிரிவினால் ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
உரிமையாளரும், ஊழியர்களும், நண்பர்களும்

S.V. Murugesu
(154, Hospital Road, Jaffna)
(122, Dam Street, Colombo-12)
(Maruthanagar Karadipokku Junction Kilinochchi)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 08 - 04 - 1938

இறப்பு 27 - 02 - 2022

## அமரர் திருமதி வைரமுத்து இராசம்மா
(மாணிக்கம்)

கீரிமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வைரமுத்து இராசம்மா அவர்கள் நேற்று முன்தினம் (27.02.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னப்பொடி சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வைரமுத்துவின் பாசமிகு துணைவியாரும், வடிவாம்பிக்கை, கமலாவதி, சிவராசா, காலஞ்சென்ற இராசகுமார் மற்றும் சுசிலாதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவராசா, நேசரத்தினம், மைதிலி, நாகராசா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பார்கவி, சிவதர்சினி, தேனுஷா, தீபன்ராஜ், லோஜினி, கிசோர், ரெபேக்கா, யதுஷியா, பிதுசியா, கோபியா, ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கஜோனா, திலக்ஷா ஆகியோரின் அன்பு பூட்டியமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நகுலேஸ்வரா வீதி,
கீரிமலை.

076 451 4657

தகவல்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



தோற்றம் 06 . 12 . 1926

மறைவு 28 . 02 . 2022

## திருமதி மனோன்மணியம்மா சிவசம்பு
(ஓய்வுநிலை ஆசிரியர்)

கச்சாய் வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணியம்மா சிவசம்பு நேற்று (28.02.2022) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற புண்ணியர் - நாச்சிப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சிவசம்புவின் அன்பு மனைவியும், சசி, பத்மநாதன் (ஓய்வுநிலை சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் கணிதம்), வாணி (ஆசிரியர் - யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி) ஆகியோரின் தாயாரும், சடாச்சரமூர்த்தி (ஓய்வுநிலை மின் அத்தியட்சகர்), கலைச்செல்வி, குணசிங்கம் (அதிபர் - யா/ கச்சாய் மகா வித்தியாலயம்) ஆகியோரின் மாமியாரும், வித்தகி (செயற்கை மற்றும் சார் உறுப்பியல் சிகிச்சையாளர், வைத்தியசாலை கிளிநொச்சி), நர்த்தகி (முகாமைத்துவ உதவியாளர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், யாழ்ப்பாணம்), திருத்தகி (மருந்தாளர் வைத்தியசாலை - கிளிநொச்சி), மயூரதன், மகிழினி (ஆசிரியர் - கிளி/ தர்மபுரம் மத்திய கல்லூரி), மகிழ்நன் (பொருளியல் உதவியாளர், மகா இஞ்ஜினியரிங் பிறைவேற் லிமிடெட்ற்), முகுந்தன் (பொறியியலாளர் டயலொக்), விசாகன் (வைத்தியர் - வைத்தியசாலை கிளிநொச்சி), சுரேஸ்காந் (ஆசிரியர் - யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (01.03.2022) செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 938 9280

(cr 37175) (2.6)

# மரண அறிவித்தல்



பிறப்பு 04.09.1945

இறப்பு 27.02.2022

## நாகலிங்கம் தர்மலிங்கம்

யாழ். காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தை உருத்திராமாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தர்மலிங்கம் அவர்கள் கடந்த (27.02.2022) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம், வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னம்பலம் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், சுவர்ணம் (தேவி) அவர்களின் அன்புக்கணவரும், சுதாகரன் (Husky retailer - கனடா) பிரபாகரன் (Master of Science - கனடா) கார்த்திகா (AAT - பிரித்தானியா), ஜங்கரன் (Master of Engineering) அரிகரன் (Master of Science - ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிந்துஜா (கனடா) தயாளி (B.Sc, கனடா), சயந்தன் (M.Sc - பிரித்தானியா), தயாந்திக்கா (MBA), சபீனா (B.Sc, ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும், நேயன், சனுஷ், மகிழினி, ருத்விக்கா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம் (லிங்கம் ஸ்டோர்ஸ்), பாக்கியலட்சுமி (கொழும்பு) மற்றும் மகாலிங்கம் (லிங்கம் ஸ்டோர்ஸ்), ரதிதேவி (கொழும்பு), சரோஜினி தேவி (கனடா), பத்மசோதி (லண்டன்), தனலட்சுமி (லண்டன்), அமிர்தலிங்கம் (லண்டன்), கமலாம்பிகை (ஆவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான செல்வராசா, சபாநாயகம், பரமேஸ்வரன் மற்றும் விஜயலட்சுமி, நிர்மலாதேவி, நித்தியானந்தன், சிவராசா, ஜீவா, சிவபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பத்துமாவதி, பரஞ்சோதி, பரமராசா, நாகம்மா காலஞ்சென்ற செல்வராசா, கமலாதேவி, காலஞ்சென்றவர்களான லோகேஸ்வரி, இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பாலச்சந்திரன் (பிரதேச சபை உறுப்பினர் - காரைநகர்) நிமலேஸ்வரன் (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - யாழ்ப்பாணம்), விக்னேஸ்வரன் (முன்னாள் கல்விப் பணிப்பாளர் - வடமாகாணம்), குணரத்தினம் (S.V முருகேசு உரிமையாளர்), ஜெகநாதன் (வர்த்தகர் - பிரான்ஸ்) ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (01.03.2022) செவ்வாய்க்கிழமை பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் காலை 8.00 மணி முதல் பிற்பகல் 5.00 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் இன்று (02.03.2022) புதன்கிழமை காரைநகர் புதுறோட்டு இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (03.03.2022) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது காரைநகர் புதுறோட்டு இல்லத்தில் இறுதிக் கிரியை நடைபெற்று பின்னர் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவத்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

புதுறோட், காரைநகர்.
077 518 9203

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை - சுழிபுரம் கடைகளை வாடகைக்கு வழங்குதல் - 2022

வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கடைகளை விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த வாடகைக்கு அமைவாக வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக் குறைந்த ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் கீழ்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் கோரப்படுகின்றது.

| தொடர் இல. | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | மீளளிக்க முடியாத கேள்விப்படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | சத்திய காட்டு சந்தைக் கடை இல 04 | 225,000.00 | 4,500.00 | 1000.00 |
| 02 | சுழிபுரம் சத்திய காட்டு சந்தைக் கடை புதியது இல 01 | 603,000.00 | 12,060.00 | 1000.00 |
| 03 | சுழிபுரம் நவீன சந்தைக் கடை இல. - 02 | 585,000.00 | 11,700.00 | 1000.00 |
| 04 | சுழிபுரம் நவீன சந்தைக் கடை இல. - 03 | 585,000.00 | 11,700.00 | 1000.00 |
| 05 | சுழிபுரம் நவீன சந்தைக் கடை இல. - 04 | 540,000.00 | 10,800.00 | 1000.00 |
| 06 | சுழிபுரம் நவீன சந்தைக் கடை இல. - 05 | 405,000.00 | 8,100.00 | 1000.00 |
| 07 | சங்கானை சந்தை உட்புறக்கடைத்தொகுதி இல.- 13 | 960,000.00 | 19,200.00 | 1000.00 |
| 08 | சங்கானை சந்தை உட்புறக்கடைத்தொகுதி இல. - 23 | 960,000.00 | 19,200.00 | 1000.00 |

கேள்விப்படிவம் வழங்கப்படும் திகதி :- 2022.03.02 - 2022.03.16 மதியம் 12.00 மணி வரை
கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 2022.03.22 பி.ப 02.00 மணிவரை
கேள்விப்படிவம் திறக்கப்படும் திகதி :- 2022.03.22 பி.ப 02.30 மணி

## நிபந்தனைகள் :

- அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம். மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணங்கள். ஆகியவற்றைப் பணமாக செலுத்தி ஆளடையாள அட்டையைச் சமர்ப்பித்து 2022.03.02 ஆம் திகதியில் இருந்து 2022.03.16 ஆம் திகதி வரை ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விப்படிவம் இணைப்பிரதிகளில் பெற்று 2022.03.22ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் விண்ணப்பித்தல் வேண்டும். தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- அலுவலகத்தில் இணைப்பிரதிகளில் வழங்கப்படும் கேள்விப்படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பித்தல் வேண்டும். அலுவலகத்தால் விநியோகிக்கப்படும் படிவங்களில் விண்ணப்பதாரர் எவ்விதமான மாற்றங்களும் செய்தல் ஆகாது.
- படிவத்தை பூரணப்படுத்துவதில் ஏற்படும் திருத்தங்களில் விண்ணப்பதாரரால் ஒப்பமிட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்வோர் மூலப்பிரதி, இணைப்பிரதி ஆகிய இரண்டினையும் பூரணப்படுத்தி தமது கேள்விகளை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு மூலப்பிரதியை "தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்" என முகவரியிட்டு கேள்வியடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படலாம் அல்லது அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடலாம். மற்றைய இணைப் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகமம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
- 2021.03.22ஆம் திகதி நண்பகல் 02.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் மட்டும் அன்று பி.ப 02.30 மணிக்கு கேள்விச்சபையின் முன்னிலையில் திறக்கப்படும். விண்ணப்பதாரர் அல்லது அவரின் எழுத்து மூல அதிகாரம் பெற்ற பிரதிநிதி அவ்வேளையில் சமூகமளிக்கலாம்.
- 2021.03.22ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு பின்னர் இவ்வலுவலகத்திற்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
- ஒரு விண்ணப்பப் படிவத்தில் ஒரு கடைக்கு மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட கடைகளுக்கு விண்ணப்பிப்பதாயின் ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் உரிய முறையில் சபையில் பெற்று விண்ணப்பிக்கலாம்.
- அரச நிறுவனங்களும, கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுச்சங்கங்களும் இக்கேள்வி நடைமுறைக்கமைவாக விண்ணப்பிக்கலாம். எக்கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
- கேள்விதாரர்கள் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் தான் வதியும் இடத்தின் கிராம அலுவலரிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடச்சான்றிதழ், மற்றும் தேசிய அடையாள அட்டைப்பிரதி சமர்ப்பித்தல் வேண்டும்.
- கடந்த காலங்களில் தவறுநர் பட்டயலில் (Defaulters list) அட்டவணைப்படுத்தப்பட்டோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகையாக, வரியாக நிலுவையில் உள்ளோர் கேள்விகள் கோர அருகதையற்றவர் ஆவார். அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது கண்டு பிடிக்கப்படும் பட்சத்தில் கேள்வி நிராகரிக்கப்பட்டு செலுத்திய வைப்புப்பணம் அரச உடமையாக்கப்படும். பிரதேச சபையுடனான சகல எழுத்து மூல, வாய் மூல தொடர்பாடல்கள் யாவும் குத்தகைக் காரராலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். அவரது பிரதிநிதி ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்.
- கேள்விகாரரால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித்தொகைகள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்ணயத் தொகையைக்காட்டிலும் அதிகரித்ததாயிருத்தல் வேண்டும். ஆகக் கூடிய கேள்வித்தொகை ஏற்றுக்கொள்ளப்படும்.
- ஏற்றுக்கொள்ளப்படும் சித்திகரக் கேள்விக்காரர் தமது கேள்வித்தொகையினை ஒரே தடவையில் 2021.03.28 ஆம் திகதிக்கு முன்னர் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் சங்கானை , சுழிபுரம் உப அலுவலகங்களில் செலுத்துதல் வேண்டும்.
- வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் விலைமதிப்பீட்டுத் திணைக்களம் மதிப்பிட்ட கடைக்கான மாதாந்த வாடகையை பணமாக மாதாந்தம் செலுத்துதல் வேண்டும்.
- காலத்திற்கு காலம் அரச கொள்கைகளுக்கமைய வரிவிதிப்புக்கள் ஏதேனும் இருப்பின் அதனை செலுத்துதல் வேண்டும்.
- மாதாந்த வாடகைப் பணத்தை அந்த மாதம் இறுதி வேலை நாளன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறின் கட்டுப் பணத்தின் 10 சதவீதம் தண்டப்பணமாக மேலதிகமாக செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களுக்கு வாடகைப்பணத்தினை செலுத்தத்தவறுவோரது ஒப்பந்தம் முன் அறிவித்தலின்றி இரத்தச்செய்யப்படும்.
- முற்குறிப்பிடப்பட்ட 14ஆவது 15ஆவது நிபந்தனைப் பிரகாரம் நடக்கத்தவறுமிடத்து வாடகை ஒப்பந்தம் இரத்துச்செய்யப்பட்டுச் செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்புச் செய்யப்பட மாட்டாது என்பதுடன் அவர்களது பெயர் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.
- தங்களால் நடாத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
- குத்தகையாளர் தான் நடாத்தும் தொழிலின் அல்லது வியாபாரத்தின் வருடாந்த உத்தரவுக் கட்டணத்தை வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் தொகை குறித்து அறிவிக்கப்பட்டதும் குறித்த காலத்தில் செலுத்தப்படல் வேண்டும்.
- வாடகைக்கு கொடுப்பவர் குறைந்தது 03 வருடங்களுக்கு ஒருமுறையும் அல்லது தேவையேற்படின் காலத்திற்கு காலம் வாடகையை மீள் பரிசீலனை செய்வதற்கு அத்தொகையை அறவீடு செய்வதற்கும் பூரண அதிகாரமுள்ளவராயிருக்கின்றார். அதற்கு வாடகைக்காரர் மறுப்பு தெரிவிக்க முடியாது.
- குத்தகைக்குப்பெற்ற கடையினர் மின்சார இணைப்புக்கட்டணங்கள் மற்றும் மாதாந்தக் கட்டணங்கள் யாவும் குத்தகையாளரின் பொறுப்பில் அமையும்.
- கடையை வேறு ஒருவருக்கும் சாட்டுதல் செய்யவோ அல்லது உப வாடகைக்கு வழங்கவோ இயலாது. அவ்வாறு உப வாடகைக்கு வழங்கப்பட்டிருத்தல் தொடர்பாக சபையினால் கண்டுபிடிக்கப்படின் எந்த ஒரு அறிவித்தலும் இன்றி கடை மீளப் பெறப்படும்.
- கேள்வித் திகதிக்கு முந்திய ஐந்து வருட காலத்திற்குள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்செயல்களுக்காக நீதி மன்றத்தினால் தண்டிக்கப்பட்ட ஒருவர் எந்தக் கடைக்கும் கேள்விகள் சமர்ப்பிப்பதற்கு அருகதையற்றவராவார்.
  - மிகை இலாபம் ஈட்டிய குற்றம்.
  - நிறுத்தல் முகத்தலளவைக் கட்டளைச் சட்டத்தை மீறிய குற்றம்.
  - சந்தை உபவிதிகளை மீறிய குற்றம்.
- உள்ளூராட்சி மன்றங்களுக்கு சொந்தமான சந்தைக்கடைகளை குத்தகைக்கு விடுதல் தொடர்பான 1980/40ம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.
- கடைத்தொகுதியின் உட்புறக்கடைகள் சாப்பாட்டுக்கடைகள், தேநீர் கடைகள், ஐஸ்கிறீம் மற்றும் குளிர்பான வகைகள் சந்தையில் வியாபாரம் செய்யும் பொருட்கள் போன்ற வியாபாரங்கள் செய்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.
- சித்தி பெற்ற கேள்விதாரர் குறித்த காலத்தில் கட்டுப்பணம் செலுத்தத் தவறின் எந்தவித அறிவித்தலுமின்றி கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்படுவதுடன் கேள்விவைப்புப்பணமும் மீளளிக்கப்படாது சபை நிதிக்கு மாற்றப்படும்.மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் கடமை நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**த.நடனேந்திரன்,**
**தவிசாளர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்.**
**02.03.2022**

(ம37131) (2x 6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவக்கால ஆற்றுகை

## பிரதிகள் வழங்கும் வைபவம் இன்று!

திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பைச் சித்திரிக்கும் திருப்பாடு களின் நாடகத்துக்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளாகிய இன்று புதன் கிழமை மாலை 4.30 மணிக்கு திருமறைக் கலாமன்றத்தின் 'கலைஞான சுரபி' தியான இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில் திருமறைக் கலாமன்றத்தின் தற்போதைய இயக்குநர் அருட்பணி அ.பி.ஜெயசேகரம் அடிகள் கலந்து கொண்டு ஆசியுரை வழங்குவதுடன், இந்த ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள கலை ஞர்களுக்கான பிரதிகளையும் வழங்கவுள்ளார்.

திருப்பாடுகளின் நாடகம் ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நான்கு நாள்களுக்கு 'காவிய நாயகன்' என்னும் பெயரில் மாலை 6.45 மணிக்கு திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது. 'காவிய நாயகன்' ஆற்றுகை முதன்முதலாக 2001 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து 2004, 2008ஆம் ஆண்டுகளிலும் இறுதியாக 2013ஆம் ஆண்டிலும் மேடையேற்றப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)



பூமணி அம்மா அறக்கட்டளையின் ஸ்தாபகத் தலைவர் விசுவாசம் செல்வராசாவின் நெறிப் படுத்தலில் பூமணி அம்மா அறக்கட்டளையினரால் இளவாலை மாரீசன்கூடல் சுப்பிரமணிய வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ம-14,20)

**பெண் பணியாளர் தேவை**
மிக்சர் தொழிற்சாலை ஒன்றிற்கு பெண் பணியாளர் தேவை.
தொடர்பு: 076 583 0277

**மாபிள் வேலை**
உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி - 50 ரூபாய்
077 334 1281

**வீடு வாடகைக்கு தேவை**
யாழ். நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில் ஆகிய பகுதியில் வாடகைக்கு தேவை.
தொடர்பு:
077 844 5063

**உடனடி பயணம்**

கனடா, லண்டன்
இத்தாலி, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி
ஆகிய நாடுகளுக்கு தாமதமில்லா ORIGINAL VISA க்களுடன் உடனடி பயணம்.
(CTC) கப்பல் பயிற்சி பெற்றவர்கள்
Hotline 077 6222631

## 7 ½ மணிநேரம்...

E, T, U, V, W வலயங்களில் காலை 8 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையான காலப்பகுதியிலும், F, P, Q, R, S வலயங்களில் பிற்பகல் 1 மணி முதல் மாலை 6 மணி வரையான காலப்பகுதியிலும் 5 மணித்தியால மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

E, T, U, V, W வலயங்களுக்கு மாலை 6 மணி முதல் இரவு 8.30 வரையான காலப்பகுதியில் இரண்டரை மணித்தியால மின்வெட்டும், F, P, Q, R, S வலயங்களுக்கு இரவு 8.30 முதல் 11 மணி வரையான காலப்பகுதியில் இரண்டரை மணித்தியால மின்வெட்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அதேநேரம், அதிக கேள்வி நிலவும் இரவு வேளைகளில், தேவை ஏற்படின் திட்டமிடப்படாத வகையில் 30 நிமிட மின்துண்டிப்பு நடைமுறைப்படுத்தப்படலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாலை 6 மணி முதல் இரவு 10 மணிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## சிவராத்திரி...

வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் அதை அண்டிய பகுதிகள் தொல்பொருள் திணைக்களத்துக்குரியவை என்று தெரிவித்து தொல்பொருள் திணைக்களம் மற்றும் பொலிஸாரால் வவுனியா நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதையடுத்து ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்ளவும் ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பல்வேறு கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் சிவராத்திரி பூசைகள் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பக்திபூர்வமான நடைபெறும். கடந்த இருவருடங்களாக சிவராத்திரி வழிபாடுகள் தடுக்கப்பட்டிருந்த நிலையில் இந்த முறையும் வழிபாடுகளுக்குத் தடை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. நேற்றுக்காலை முதல் ஆலய வளாகத்தில் இராணுவத்தினர், பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். கடும் பாதுகாப்புக் கெடுபிடிகள் காணப்பட்டன.

காலம்காலமாகச் செய்துவந்த வழிபாடுகள் தடுக்கப்படுகின்றன. ஆலயத்தில் பூசைகள் மேற்கொள்ளவும், எமது மத சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கும் உரிய தரப்புக்கள் அனுமதியை வழங்க வேண்டும் என்றும் ஆலய பூசகர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (எ-110)

## ஐ.நாவின்...

அந்தத் தீர்மானத்தின்மூலம் இலங்கையில் சமூகங்கள் பிளவுபட்டு பொருளாதாரம், அமைதி, நல்லிணக்கம் என்பவை சவாலுக்குட்படுத்தப்படும்.

இவ்வாறு இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 49 ஆவது கூட்டத்தொடர் நேற்று முன்தினம் ஜெனிவாவில் ஆரம்பமானது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிச்செல் பச்லெட் முன்வைத்துள்ள இலங்கை தொடர்பான எழுத்துமூல அறிக்கை தொடர்பாக நாளை ஆராயப்படவுள்ளது.

இந்தநிலையில், இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று கூட்டத்தொடரில் உரையாற்றினார். அதிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மோதலின் பின்னர் நிலைமையை சீர் செய்வதற்கு முன்னேற்றகரமான முயற்சிகளை இலங்கை அரசாங்கம் எடுத்துள்ளது. அவற்றை மேலும் முன்நோக்கிக் கொண்டுசெல்ல எதிர்பார்க்கின்றோம்.

இந்தப் பேரவை ஊடாக முன்வைக்கப்பட்ட 3 மீளாய்வுகளை நிறைவு செய்துள்ளோம். அதற்காக நாம் உள்நாட்டு, சர்வதேசப் பிரதிநிதிகளுடன் நேரடியாகக் கலந்துரையாடியுள்ளோம்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் கருத்துச் சுதந்திரம் உள்ளிட்ட ஜனநாயக சுதந்திரத்துக்கு தடையாக இருக்கக்கூடாது என்று நாம் நம்புகின்றோம். அதைநோக்காகக் கொண்டு அண்மையில் இலங்கை நாடாளுமன்றத்தில் சட்டவரைவு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதனூடாக பயங்கரவாத் தடைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

சாட்சிகளைச் சேகரிப்பதற்காக முன்வைக்கப்பட்ட 46/1 தீர்மானம் இலங்கை மக்களுக்குப் பொருத்தமற்றது என்பதை நாம் நினைவுபடுத்துகின்றோம் - என்றார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் இதுவரை 8 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்த தீர்மானங்களின் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் திருப்தியடையும் வகையில், இதுவரை எந்தவொரு ஆக்கபூர்வமான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் நிலவுகின்றது. இந்தப் பின்னணியிலேயே தற்போது ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ளது. (அ-எ-இ)

## பாரதூரமான...

நாடு முழுவதும் டீசல் , மண்ணெண்ணெய் மற்றும் பெற்றோலுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகின்றது. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மட்டுப்படுத்தப்பட்டு எரிபொருள் வழங்கப்படும் அதேநேரம், பல எரி பொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் கையிருப்பு தீர்ந்துள்ளது. தங்களுக்கான எரிபொருள் விநியோகம் குறைக்கப்பட்டுள்ளதால் எரிபொருள் கையிருப்பைச் சீராக மேற்கொள்ள முடியவில்லை என்று எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டின் பல பாகங்களிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசைகளில் மக்கள் வாகனங்களுடன் காத்திருக்கும் ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பதிவேற்றப்பட்டுள்ளன. மக்கள் அரசாங்கம் தொடர்பாக கடும் விமர்சனங்களையும் முன்வைப்பதையும் காணமுடிகின்றது. சில இடங்களில் காலை முதல் வரிசையில் நின்று இரவே எரிபொருள் நிரப்ப வேண்டியிருக்கின்றது என்று வாகனச் சாரதிகள் கூறுகின்றனர்.

அதேநேரம், விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் உதயகம்மன்பிலவும், அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக அதிருப்தி வெளியிட்டிருக்கின்றார்.

ஓரிரு நாள்களுக்குத் தேவையான எரிபொருளே கையிருப்பில் உள்ளது என்று தெரிவித்துள்ள அமைச்சர் கம்மன்பில, இந்த நெருக்கடிக்குத் தீர்வுகாண செயற்படுத்த வேண்டிய திட்டங்களை அமைச்சரவையில் பலமுறை முன்வைத்தும், அவை செயற்படுத்தப்படாதுள்ளன என்று கூறியுள்ளார். டொலர் பிரச்சினைக்குத் தீர்வு காணும்வரையில் எரிபொருள் நெருக்கடி தொடரும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் கம்மன்பில, நாட்டு மக்களிடம் உண்மையைக் கூறினால் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள், அதைவிடுத்துப் பிரச்சினை ஒன்றுமில்லை என்று பொய்யுரைத்தால் அது பெரும் எதிர்விளைவுகளைத் தோற்றுவிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போரிட்ட காலத்தில் ஏற்பட்ட விளைவுகளைக் காட்டிலும் தற்போது நாடு பாரதூரமான சவால்களை எதிர்கொண்டுள்ளது என்று கூறியுள்ள அமைச்சர் கம்மன்பில, பொருளாதார நெருக்கடியைச் சீர் செய்ய சர்வதேச நாணய நிதியத்தை நாடுவது அவசியமாகும் என்றும் கூறினார். (அ-எ-இ)

## உக்ரைன்...

தொடர்ந்தது. உக்ரைனின் தலைநகர் கீவ் மற்றும் கார்கீவ் போன்ற முக்கிய நகரங்கள் மீது ரஷ்யா தீவிர தாக்குதலைத் தொடுத்துள்ளது.

ரஷ்யாவின் ஏவுகணைத் தாக்குதலில் அரச கட்டடம் ஒன்று தரைமட்டமாகியுள்ளது. இந்தக் கட்டடத்தை "நகரின் மையத்தில், சுதந்திர சதுக்கத்தின் விளிம்பில் அமைந்திருக்கும் கார்கீவின் சிறப்புமிக்க அரசாங்க தலைமையகம்" என்று உக்ரைன் பத்திரிகையாளர் கிறிஸ்டோபர் மில்லர் அடையாளப்படுத்தியுள்ளார். இந்தக் கட்டடம் தரைமட்டமாகும் காட்சிகள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டுள்ளது.

இதற்கிடையில் பல்கேரியா, போலந்து, சுலோவாக்கிய ஆகிய நாடுகள் 70 போர் விமானங்களை வழங்க முன்வந்துள்ளன என்று உக்ரைன் பாதுகாப்புத்துறை அமைச்சு தெரிவித்தது. பல்கேரியா 30 விமானங்களையும், போலந்து 28 விமானங்களையும், சுலோவாக்கியா 12 விமானங்களையும் வழங்கவுள்ளன என்று கூறப்படுகின்றது. அதேநேரம் உக்ரைனுக்கு அயல்நாடான பெலாரஸ், ரஷ்யப் படைகளுடன் சேர்ந்து உக்ரைன் மீது தாக்குதல் நடத்துகின்றது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கீவ் நகரில் உள்ள தொலைக்காட்சி பிரதான கோபுரம் மீதும் ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளது. அதனால் உக்ரைன் தொலைகாட்சி சேவைகள் பாதிப்படைந்துள்ளன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதல்களில் சிக்கி இந்திய மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். கார்கீவ் நகரில் ரஷ்ய இராணுவம் நடத்திய தாக்குதலிலேயே இந்த மாணவன் உயிரிழந்துள்ளார் என்று தெரிகின்றது. கார்கீவ் நகரில் உள்ள மருத்துவக் கல்லூரி ஒன்றில் கற்பதற்குச் சென்ற இந்தியாவின், கர்நாடகாவைச் சேர்ந்த மாணவர் ஒரே உயிரிழந்துள்ளார் என்று வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேநேரம், ரஷ்யாவின் தாக்குதலில் காரில் பயணித்த இஸ்ரேலியர் ஒருவரும் ரஷ்யாவின் தாக்குதலில் உயிரிழந்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)

## வடக்கு...

தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் மற்றும் வவுனியா மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் என்பன நடத்திய ஊடகவியலாளர் சந்திப்புக்களிலேயே இந்த நெருக்கடி தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கிருஷ்ணரூபன், எரிபொருள் பற்றாக்குறை காரணமாக பஸ் சேவைகளை உரிய முறையில் நடத்த முடியாது இருக்கின்றது என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் நின்று எரிபொருள் நிரப்ப வேண்டியுள்ளது. அதனால் உரிய நேரத்தில் பஸ் சேவைகளை நடத்த முடியாதிருக்கின்றது. இந்த நிலைமை தொடர்ந்தால் பஸ் சேவைகளை மட்டுப்படுத்த வேண்டி ஏற்படும். எதிர்வரும் 7ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கும் நிலையில், பாடசாலை பஸ் சேவைகளை நடத்துவதிலும் சிக்கல்கள் காணப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மக்கள் பஸ் சேவைகளையே பெரிதும் நம்பியிருக்கின்றார்கள். இந்த விடயங்கள் தொடர்பாக கிளிநொச்சி மாவட்டச் செயலருக்குக் கடிதம் ஒன்றைக் கையளித்துள்ளோம். தனியார் பஸ்களுக்கு அன்றாடம் தேவையான எரிபொருளை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வழங்குவதற்கு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். கிளிநொச்சி மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கு நாளொன்றுக்கு 4 ஆயிரம் லீற்றர் எரிபொருள் தேவைப்படுகின்றது. அதை வழங்க மாவட்ட செயலர் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

வவுனியாவில் நேற்று ஊடக சந்திப்பு நடத்திய தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ராஜேஸ்வரன், எரிபொருள் கிடைப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட பஸ் சேவைகளையே நடத்த வேண்டியிருக்கின்றது என்று குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

வவுனியா மாவட்டத்தில் பயணிகள் பஸ் சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கு சுழற்சி முறையில் எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கொழும்பு மற்றும் வடக்கில் சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கான எரிபொருள் தடையின்றி கிடைப்பதற்கான ஏற்பாடுகளை வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் மாவட்டச் செயலர் ஆகியோர் செய்ய வேண்டும்.

அடுத்தவாரமளவில் கொழும்பில் இருந்து வடக்குக்கு வரும் ரயில் சேவைகள் சீரமைப்புப் பணிகளுக்காக நிறுத்தப்படவுள்ளன. இந்தநிலைமையில் பஸ் சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்டால் மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிடும் - என்றார். (அ-எ-113-110)

## சுகாதாரத்...

தொழிற்சங்கச் சம்மேளனம் தெரிவித்தது.

நாடு முழுவதும் முன்னெடுக்கப்படவுள்ள தொழிற்சங்க நடவடிக்கைக்கு, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை தாதிய உத்தியோகத்தர்களும் ஆதரவு வழங்கவுள்ளனர்.

பணிப்புறக்கணிப்புக் காலத்தில் அவசர மற்றும் உயிர்காக்கும் சேவைகளில் மட்டுமே தாதிய உத்தியோகத்தர்கள் ஈடுபடுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சில கோரிக்கைகளை முன்வைத்து கடந்த மாதம் 7ஆம் திகதி முதல், 9 நாள்கள் தாதியர் உட்பட 18 சுகாதார தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தன. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தா, மஹிந்தவின் வீடுகளை மக்கள் முற்றுகையிட வேண்டும்

## ஹிருணிகா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 2
ஜனாதிபதி மற்றும் பிரதமரின் மாளிகை மற்றும் வீடுகளை மக்கள் முற்றுகையிட வேண்டு மென நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் அண்மையில் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ராஜபக்சாக்களின் ஆட்சியில் இடம்பெறும் ஊழலால் நாட்டில் டொலர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நாட்டில் எரிபொருள் இல்லை. மின்சாரம் இல்லை. ஆனால், அரசாங்கம் தீர்வை வழங்காமல் வேடிக்கை பார்க்கிறது. மக்கள் கட்டணம் செலுத்தியும் மின் துண்டிப்பை நடைமுறைப்படுத்துவது நியாயமா? வெளிநாடுகளில் இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருந்தால் அந்நாட்டு மக்களின் அணுகுமுறை வேறுவிதமாக இருந்திருக்கும்.

எனவே நாட்டுமக்கள் ஒன்றிணைந்து அரச தலைவர் மற்றும் பிரதமர் ஆகியோரின் மாளிகை வீடுகளை முற்றுகையிட வேண்டும் - என்றார். (வ-இ)



## துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச் 2
அம்பாறை, இங்கினியாகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியொன்றுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

உடவத்துர, நாமல் ஓயா பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை அம்பாறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 60 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)
✓ A9 வீதியில் இருந்து 150M தூரம்
✓ லங்கா அசோக் லேடென் வாகனவிற்பனை நிலையத்திற்கு அருகாமையில்
✓ நாவற்குழி சந்தியிலிருந்து 500 M தூரம்
✓ யாழ். பஸ் நிலையத்திலிருந்து 8 KM தூரம்
✓ 18 அடிப்பாதையுடன் இயற்கை சூழல்
✓ நன்னீர்ச்சூழல்
(CS 18644) (4/6)

தொடர்பு :
குரு - 077 6234 204, 077 2880 152, 076 6583 621,077 9116 983

## விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி

இல.63, சிவன் கடக்க வீதி, [illegible], யாழ்ப்பாணம். 077 248 7774

A/L 2021 எழுத்துப் பரீட்சை நிறைவு செய்த மாணவர்களுக்கான
மாபெரும் செயன்முறை பயிற்சி வகுப்புக்கள்

பொறியியல் தொழினுட்பவியல் | உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்

✓ பரீட்சையில் எதிர்பார்க்கப்படும் செயன்முறைவினாக்களைக் கொண்ட பரீட்சைகள் நடாத்தப்பட்டு மதிப்பீட்டுப் புள்ளிகள் வழங்கப்படும்.
✓ ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனித்தனியாக அனைத்து செயன்முறைகளும் பயிற்றுவிக்கப்படும்.

இன்றிலிருந்து ஆரம்பம்

அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்.
077 248 7774 / 021 221 7860 / 076 552 9093

"தரம், தனித்துவம், உயர்ந்த பெறுபேறு" இதுவே எமது இலக்கு

## காணவில்லை



Doberman Dog

உரும்பிராய், சுன்னாகத்தை அண்மித்த பகுதிகளில் எமது செல்லப்பிராணியை கண்டதாக அறியப்படுகின்றது.
அங்க அடையாளம்
2.5 அடி உயரம், வால் இல்லை, உடம்பு கறுப்பு, கால், கழுத்து பிறவுண் நிறம்

தயவு கூர்ந்து எமது செல்லப்பிராணியை எங்கேனும் கண்டால் கீழ் காணும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.
அறியத் தருபவர்களுக்குதக்க சன்மானம் வழங்கப்படும்.
(CS 4728) (3/6)

077 382 0798

# உதயனின் ஊடகப் பயிற்சிப் பட்டறை 2022

ஊடகத்துறையில் சாதிக்கத் துடிக்கும் இளையோரே! உங்கள் கனவுகளுக்கு களம் கொடுக்கிறது உதயன்

ஒருவார காலப் பயிற்சி

✓ நெஞ்சில் உரமும்,
✓ நேர்மைத் திறமும்,
✓ சமூகப் பொறுப்பும்,
✓ எழுத்தில் வலிமையும்,
✓ தேடலும் ஆர்வமும் கொண்டுள்ள
✓ இளையோரே உங்களுக்கு ஒரு வாய்ப்பு!
✓ இவையே விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்.




விண்ணப்ப முடிவுத் திகதி: 12.03.2022

திறமையானோருக்கு உடனடி வேலைவாய்ப்பு

உதயனின் ஊடகப்பயிற்சி பட்டறை- 2022 க்கு இப்போதே சுயவிபரத்தோடு விண்ணப்பியுங்கள்!

தபால் முகவரி:
உதயனின் ஊடகப்பயிற்சி – 2022
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல்: editor@uthayan.com

வட்ஸப் /வைபர்: 0771165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.